விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 174 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 28 புதன்கிழமை (11.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


# கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியில்
# தையிட்டியில் நேற்று போராட்டம்
## தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

பொலிசாரின் கடுமையான அச்சுறுத்தலுக்கு மத்தியில் யாழ்.தையிட்டி திஸ்ஸ ரஜ மகா விகாரையை அகற்றக் கோரி நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

(15ஆம் பக்கம் பார்க்க)



## ஜேர்மனிக்கு பயணமானார் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு

16ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி விகாரைக்கு
### கஞ்சாவுடன் வந்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரையில் வழிபட தென்பகுதியிலிருந்து வந்த சிங்களவர் ஒருவர்

15ஆம் பக்கம் பார்க்க

## பொறுப்புக்கூறலை நிறைவேற்ற ஜனாதிபதியிடம் வலியுறுத்துக
### ஜேர்மனியிடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(கொழும்பு)

பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தமது உறுதி மொழிகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை ஜேர்மனி வலியுறுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இன்று உத்தியோகபூர்வ விஜயமாக ஜேர்மனி செல்லவுள்ள நிலையில், ஜேர்மனிக்கான மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் பிலிப் ஃபிரிஷ் அறிக்கை யொன்றின் ஊடாக இந்தக் கோரிக்

15ஆம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதியின் மன்னிப்பு என்ற போர்வையில்
## 68 சிறைக் கைதிகள் சட்டவிரோதமாக விடுவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு என்ற போர்வையில் 68 சிறைக் கைதிகள் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டுள்ளனர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகக் கொழும்பு நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மன்னிப்பு என்ற போர்வையில் கைதிகள் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்ட இன்னும் பல சம்பவங்கள் மேலதிக விசாரணைகளில்

16ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை
### நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார

(கொழும்பு)

ஜனாதிபதியின் உயர் அதிகாரத்தை முறைகேடான வகையில் பயன்படுத்தியவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் விடுவிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்



15ஆம் பக்கம்

## வற்றாப்பளை அம்மன் ஆலயம் சென்ற இளைஞன்
### மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் ஆலயம்சென்று விட்டு திரும்பிய இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மாங்குளம் வீதி ஒலுமடு பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் வாய்க்காலினுள் வீழ்ந்ததில் இளைஞன் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### சிறைச்சாலைத் தலைமையகம்
## சட்டவிரோதமான முறையில் கைதிகளை விடுவித்துள்ளது
### ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

(கொழும்பு)

சிறைச்சாலை தலைமையகம் சட்டவிரோதமான முறையில் கைதிகளை விடுவித்துள்ளது. சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் தயாராக வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரம் - மிஹிந்தலை விகாரையில் நேற்றுச் செவ்

15ஆம் பக்கம் பார்க்க

## இணக்கமான சூழ்நிலைக்குப் பதிலாக வறட்டுச் சவடால்களே பதிலாகின
### தமிழரசுக் கட்சியுடனான சந்திப்புத் தொடர்பில் ரெலோ அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இணக்கமான சூழ்நிலைக்குப் பதிலாக வறட்டுச் சவடால்களே பதிலாக வந்தன என இலங்கைத் தமிழரசுக் கட்சியுடனான சந்திப்புத் தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியுடனான சந்திப்பு தொடர்பில் ரெலோ வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்மை காக்கும் உங்கள் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிநல்லு சிறுவர் பூங்கா மண்டைதீவில் நாளை திறப்பு

(மண்டைதீவு)

ஆனந்தநடராசா தயாளன், தயாளன் கமலினி தம்பதியர்களால் மண்டைதீவு ஆறாம் வட்டாரத்தில் நிர்மாணிக்கப்பட்ட அபிநல்லு சிறுவர் பூங்காவின் திறப்புவிழாவும் கவியரசு கண்ணதாசனின் சிலை திரை நீக்கமும் நாளை (12) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மண்டைதீவு மகாவித்தியாலய அதிபர் சி.இளங்கோ, மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் டென்சில் சேவியர் சுவைனஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் மதத் தலைவர்களின் ஆசியுரை, பெரியோர்களின் வாழ்த்துரை என்பனவும் இடம்பெறும். (ந)

# இணுவையூரில் நாளை உலகப் பெருமஞ்சத் திருவிழா

(இணுவில்)

இணுவில் அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான விசுவாவசு வருட மஹோற்சவமானது கடந்த முதலாம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்புற இடம்பெற்று வரும் நிலையில் 12ம் திருவிழாவான நாளை வியாழக்கிழமை மஞ்சத்திருவிழா சிறப்புற இடம்பெறவுள்ளது.

நாளை மாலை விசேட வசந்தமண்டபப் பூஜைகளை தொடர்ந்து இணுவைக் கந்தசுவாமியார் வள்ளியம்மை தெய்வானைதாயார் சமேத சண்முகனாக, விநாயகர், சிவனார் உடன்வர இணுவையூரின் பெருமைகளைப் பறைசாற்றும் நூற்றாண்டுப்பழமை மிகு உலகப்பெரு மஞ்சத்தில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். (ம-4,7)

# திருகோணமலையில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிந்தபுர காட்டுப் பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மகிந்தபுர காட்டுப் பகுதியில் மாடு பார்ப்பதற்காகச் சென்ற வெருகல் -பூநகர் கிராமத்தைச் சேர்ந்த இராசையா கணேசன் (வயது 55) என்பவரே யானைத் தாக்குதலுக்குள்ளாகி சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சேருநுவர திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.ஜே.நூருல்லா வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்டு விசாரணை செய்த பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-4,7)


யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி - சுன்னாகம்
சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான
**கேள்வி அறிவித்தல்**

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கான சிற்றுண்டிச்சாலை இனை 2025.07.01ஆம் திகதி முதல் 2026.06.30 ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விப் பத்திரங்கள் பாடசாலை நிர்வாகத்தினால் கோரப்படுகின்றது. கேள்விப் பத்திரங்கள் யாவும் "**அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி - சுன்னாகம்**" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2025.06.25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**சிற்றுண்டிச்சாலை கேள்விப் பத்திரம்**" எனக் குறிப்பிடவும். விண்ணப்பங்களையும், மேலதிக விபரங்களையும் பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

(4506) **அதிபர்**


# சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை பலிக்கடாவாகியுள்ளது

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துக்கு இலங்கை அரசாங்கம் பலிக்கடாவாகியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையிலேயே, மின்சாரக் கட்டணத்தை 18.3 சதவீதத்தால் அதிகரிக்கும் விடயத்தில் அரசாங்கம் செயற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தற்போதைய நிலையில் மின்சாரக் கட்டணத்தை 18.3 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அவசியமில்லை. எனினும், அரசாங்கம் சட்ட ரீதியற்ற மற்றும் செயற்படுத்த முடியாத நிபந்தனைக்கு உடன்பட்டுள்ளது.

இதனடிப்படையிலேயே, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனைப் பெற்றுக்கொள்வதற்காக மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்துவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (ம-4,7)

# கிளிநொச்சியைச் சேர்ந்தவர் தமிழகத்தில் பொலிஸாரால் கைது

தமிழகம் காரைக்கால் ரயில் நிலையத்தில் உரிய ஆவணங்கள் இன்றி சுற்றித் திரிந்த இலங்கைவாசியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காரைக்கால் ரயில் நிலையத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போதே குறித்த இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டுள்ளவர் கிளிநொச்சி பகுதியை சேர்ந்த 35 வயதான அஜந்தன் என்பது தெரியவந்துள்ளது.

பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரித்த போது, அவரிடம் எந்த ஆவணமும் இல்லை என்பது தெரியவந்தது.

கடந்த 2019-ஆம் ஆண்டு 6 மாத கால விசாவில் இந்தியா வந்ததாகவும், விசாக் காலம் முடிந்து இலங்கை திரும்பாமல், மேற்கு வங்கம், ஆந்திரா, டில்லி, கேரளா, தமிழ்நாடு என நாட்டின் பல பகுதிகளில் சுற்றித் திரிந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் அவரைக் கைது செய்து, காரைக்கால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர். (ம-4,7)

# யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

உலக இரத்த தான தினம் - 2025 முன்னிட்டு யாழ். இந்திய துணைத் தூதரகம் ஏற்பாடு செய்துள்ள இரத்த தான முகாமானது நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (13) காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இரத்த தானம் செய்பவர்களுக்கு இலவச மரக்கன்றுகளும் வழங்கப்படவுள்ளது. (ம-4,7)

# இணக்கமான...

வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியத் தரப்பாக ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதற்கு பல தடவைகள் தமிழரசு கட்சியுடன் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எடுத்துக்கொண்ட முயற்சிகள் உதாசீனப்படுத்தப்பட்டன. இதன்பின் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கும் தமிழ் தேசிய பேரவைக்கும் இடையிலான கொள்கை ரீதியான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இது சாதாரணமாக ஏற்படுத்தப்படவில்லை. பல விட்டுக்கொடுப்புகள் அரவணைப்புகளின் அடிப்படையில் தான் சாத்தியமானது.

இதன் பின் தோன்றிய அரசியல் சூழ்நிலை மாற்றங்களில் வன்னி நிலப்பரப்பில் தமிழ் தேசிய கட்சிகளின் கைகளில் சபைகளை வலுப்படுத்துகின்ற நிலைப்பாடு பற்றி பேசவே நாங்கள் அழைக்கப்பட்டோம்.

அதன் பிரகாரம் திங்கள் மதியம் தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் அலுவலகத்தில் அக் கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரனுடன் சந்திப்பு நடைபெற்றது.

அதன்போது வன்னியின் அரசியல் சூழ்நிலை பற்றி கலந்துரையாட முற்பட்ட வேளையில் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறதோ அதற்கான பதில் நடவடிக்கை வன்னியில் அமையுமென தமிழரசு கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

உங்கள் கருத்துக்கள் பயனற்றவை. வன்னியில் அதிக சபைகளை ஆளும் தரப்பு கைப்பற்றும் நிலை காணப்படுகிறது. பல சபைகளில் தனி ஒரு கட்சியாக அவர்கள் ஆசனங்களை பெற்றுள்ளார்கள். தமிழ் தேசியப் பரப்பினர் இணைந்து செயலாற்றாது விட்டால் இந்த சபைகளை ஆளுந்தரப்பிடம் இழக்க வேண்டிய சூழ்நிலை வரும். மேலும், கிழக்கு மாகாணத்தில் மாறுபட்ட அரசியல் சூழ்நிலைகளை தோற்றுவிக்கும் எனவும் தெரிவித்தோம்.

இன்னும் காலம் பிந்தவில்லை. தமிழ் தேசிய பரப்பினர் ஒன்றிணைந்து விட்டுக் கொடுப்போடு வடக்கு கிழக்கில் அனைத்து சபைகளையும் அமைப்பதற்கான முயற்சியைச் செய்ய முடியும். அதை நாங்கள் முன்னெடுக்க விரும்புகிறோம் எனவும் தெரிவித்தோம். ஆனாலும் இணக்கமான சூழ்நிலைக்குப் பதிலாக வறட்டு சவடால்களே பதிலாகின.

தனிமனித வீர வசனங்களால் எமது இனத்தினை நேர்த்தியான பாதையில் வழிநடத்த முடியாது. மக்கள் வழங்கிய ஆணையை ஏற்று தமிழ்த் தேசியப் பரப்பினர் ஒன்று கூடி ஆட்சியை கைப்பற்றுவதே மக்கள் எதிர்பார்ப்பு. அதைச் செய்வதற்கு விட்டுக்கொடுப்பு, அரவணைப்பு என்பன மிக அவசியம். தலைமைகளின் வறட்டுக் கௌரவம் இதற்குத் தடையாக இருக்கக்கூடாது.

எப்பொழுதும் ஒற்றுமைக்காகவே ரெலோ பாடுபட்டு வந்துள்ளது. அதில் மிகுந்த நம்பிக்கையும் கொண்டவர்கள் நாங்கள். அதை தவறாக புரிந்து கொண்டு வீர வசனங்கள் பேசுவதில் அர்த்தம் இல்லை. வெட்டிச் சவடால்களுக்கு நாங்கள் ஒருபொழுதும் இடமளியோம் என்று அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணிப்புதைகுழி விவகாரம்

# உண்மையும் நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

**(யாழ்ப்பாணம்) ---------------------**
**செம்மணி புதைகுழிவிவகாரம் கைவிடப்படும் விடயமாக மாறிவிடக்கூடாது. உண்மையும் நீதியும் நிலைநாட்டத்தக்க வகையில் முன்னோக்கி நகர வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**

போருக்குப் பின்னான சூழ் நிலையில் யார் எந்த வலுவான சத்தியும் இயற்கை நீதிக்கு மாறாக நிகழ்ந்த அவலங்களை மறைக்க நினைத்தாலும் அவை ஏதோவொரு விதத்தில் வெளிக்கிளம்பிய வண்ணமேயுள்ளன. செம்மணிப் புதைகுழி விவகாரமும் இப்போது அவ்வாறு வெளிக் கிளம்பி நீதித்துறையின் கட்டுப்பாட்டில் உரிய வகையில் முன் கொண்டு செல்லப்படுகின்றது. இந்த நிலை வலுவாக்கப்பட வேண்டும் என்பதுடன் புதைகுழிகளின் நீட்சி அறியப்படவும் வேண்டும் என்பதும் மிகவும் அவசியமானது. எந்தவொரு காரணத்தை முன்னிறுத்தியும் புதைகுழி அகழ்வுகள் இடை நிறுத்தப்படக்கூடாது. உரிய நிதியை உரிய காலத்தில் விடுவித்தல், புதைகுழி அகழ்வுப் பிரதேசங்களுக்கு உரிய பொலிஸ் பாதுகாப்பினை வழங்குதல், அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் தரப்பினர் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்காதிருத்தல் என்பன அவசியமானவையென எமது ஆசிரியர் சங்கம் கருதுகின்றது

இவ்விடயங்களில் எந்தவித நெகிழ்வுமற்று செயற்பட வேண்டிய பொறுப்பு ஆட்சியிலுள்ள அரசாங்கத்துக்குரியது.


இவ்விடயத்தில் மனித உரிமைகள் மீது அக்கறை கொண்ட உள்ளூர் மற்றும் சர்வதேச தரப்புக்களின் கவனத்தை எமது சங்கம் ஈர்க்கின்றது. புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கான நிதியுதவிகளை வழங்குதல், சர்வதேச கண்காணிப்பு பொறிமுறைகளை உருவாக்குதல் என்பன குறித்து அதிக அக்கறையெடுக்குமாறு தொடர்புடைய தரப்புக்களுக்கு நாம் அழுத்தம் கொடுக்கின்றோம்.

போரைக் காரணமாக வைத்து அப்பாவி மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் வெளிக்கொணரப்பட வேண்டும். பிஞ்சுக் குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட ஈவிரக்கமற்று கொலைசெய்யப்பட்டு புதைக்கபட்ட சொந்தங்களுக்கு நீதிகிடைக்க வேண்டும்.

அவர்களின் விபரங்கள் விஞ்ஞான ரீதியிலான பிறப்புரிமையியல் பரிசோதனைகளின் வாயிலாக வெளிப்படுத்தப்படவேண்டும் இதன் மூலம் இலங்கை நீதிக் கட்டமைப்பின் மீது கொண்டுள்ள நம்பிக்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள துணைசெய்யும் காரணிகளாக அல்லது நிகழ்வுகளாக இவை கருதப்பட்டு அவ்வப் போது கையில் எடுக்கப்படுவதும் பின்னர் கைவிடப்படுவதுமான போக்குகள் முடிவுறுத்தப்படவேண்டும் குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு அப்பால் குற்றம் ஒன்று நிகழ்ந்திருக்கின்றது என்பது இயற்கையின் துணையால் வெளிக்கிளம்பும் போது அதனை முன்கொண்டு செல்ல வேண்டியது பொறுப்புடையவர்களின் தார்மீகக் கடமையாகும். போரின் காரணமாக நிகழ்ந்த அவலங்களுக்கு தீர்வு காணாமல் போர் உருவான மூலக்காரணத்துக்கு தீர்வு காணுவது என்பது சாத்தியமற்றதொன்று.

அத்துடன் போரின் விளைவுகளுக்கு நீதி வழங்காத அதிகாரத் தரப்பு போரின் மூலப்பிரச்சனைக்கு தீர்வு தரும் எனும் நம்பிக்கையும் பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் உருவாகமாட்டாது என்பதும் யதார்த்தமான உண்மை. இதனை உரிய தரப்பினர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

செம்மணிப் புதைகுழி விவகாரம் கைவிடப்படும் விடயமாகவன்றி உண்மையையும் நீதியையும் நிலை நாட்டக் கூடிய வகையில் முன்கொண்டு செல்லப்படும் விடயமாக மாற வேண்டும் என்பதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் வலுவாக பதிவு செய்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)



## ரணில் த.மு.கூ இடையே சந்திப்பு

(கொழும்பு)
ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைமை குழுவினர் இடையில் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் அவரது ஃப்ளவர் வீதி அலுவலகத்தில் இந்த சந்திப்பு நிகழ்ந்தது.

தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-8)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை;

# கல்வி அமைச்சின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த அதிபர்கள்

## தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்கத் தீர்மானம்

(கொழும்பு)
டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்த கல்வி அமைச்சின் தீர்மானத்திற்கு அதிபர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய ஆபத்துக்கள் காணப்படும் இடங்கள் பாடசாலைச் சூழலில் அடையாளம் காணப்பட்டால் அதிபர்கள் அதன் பொறுப்பினை ஏற்க வேண்டுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்திற்கு அதிபர்கள் தர அதிகாரிகள் சங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அரச அதிகாரிகளை பலி கொடுக்கும் வகையிலான நடவடிக்கைக்கு எதிராக அதிபர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதியின் பின்னர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட உள்ளதாக தெரிவித்துள்ளனர். 2025 ஜூன் 9 வரை, இலங்கை முழுவதும் 25,055 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர், மேலும் 13 மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

நாட்டில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்களினால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுவதாக சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஐ.எம்.எப் பிரதிநிதி இலங்கை விஜயம்




(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத்தின் துணை நிர்வாக இயக்குநர் கலாநிதி கீதா கோபிநாத், ஜூன் 15 மற்றும் 16 ஆகிய திகதிகளில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிலைமைகள், IMF இன் நிதி உதவி திட்டங்கள், மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்கள் குறித்து உயர்மட்ட கலந்துரையாடல்களை மேற்கொள்ள இந்த விஜயம் அமையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விஜயத்தின் போது, கீதா கோபிநாத் இலங்கை அரசாங்க அதிகாரிகள், மத்திய வங்கி ஆளுநர், மற்றும் பிற பங்குதாரர்களுடன் சந்திப்பு நடத்தி, IMF இன் நீட்டிக்கப்பட்ட கடன் வசதி மற்றும் இலங்கையின் பொருளாதார சீர்திருத்த முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலங்கை கிரிக்கெட் அணிக்கான விருதுகள்

# ஆறு விருதுகளை தனதாக்கி சமரி அத்தப்பத்து சாதனை




இலங்கை ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் அணிகளின் வீர வீராங்கனைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்வின் போது இலங்கை மகளிர் அணியின் தலைவர் சமரி அத்தப்பத்து 6 விருதுகளை வென்றுள்ளார்.

அந்த வகையில் சமரி அத்தப்பத்து மகளிர் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட்டில் சிறந்த ஆட்டக்காரர் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீராங்கனை ஆகிய இரு விருதுகளையும், மகளிர் இருபதுக்கு 20 கிரிக்கெட்டில் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர், சிறந்த துடுப்பாட்ட வீராங்கனை மற்றும் சிறந்த பந்துவீச்சாளர் ஆகிய 3 விருதுகளையும் வென்றுள்ளார்.

அத்துடன் ஆண்டின் சிறந்த மகளிர் கிரிக்கெட் வீராங்கனைக்கான விருதையும் சமரி அத்தப்பத்து வென்று மொத்தமாக ஆறு விருதுகளை தன்வசப் படுத்தி சாதனை படைத்துள்ளார். (நி-3)

## ஐ.சி.சி ஹோல் ஒவ் பேமில் கௌரவத்தை பெற்ற டோனி




இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவான் எம்.எஸ். டோனி, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) ஹோல் ஒப் பேமில் தேர்வாகி உள்ளார். இந்த கௌரவத்தைப் பெறும் 11ஆவது இந்திய கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை டோனி பெற்றுள்ளார்.

இந்த வருட ஐ.சி.சியின் ஹோல் ஒப் பேமில் டோனி, அவுஸ் திரேலியாவின் மேத்யூ ஹேடன், தென்னாபிரிக்காவின் ஹாஷிம் ஆம்லா மற்றும் கிரேம் ஸ்மித் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளதாக ஐ.சி.சி அறிவித்துள்ளது.

இந்த கௌரவம் குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள டோனி, “உலகம் முழுவதிலுமிருந்து வரும் கிரிக்கெட் வீரர்களின் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் ஐ.சி.சி ஹோல் ஒப் பேமில் பெயர் இடம்பெற்றிருப்பது ஒரு மரியாதை.

இதுபோன்ற எல்லா காலத்திலும் சிறந்த வீரர்களுடன் உங்கள் பெயரையும் நினைவுகூருவது ஒரு அற்புதமான உணர்வு. இது நான் என்றென்றும் போற்றும் ஒரு கௌரவம்” என்று கூறியுள்ளார். (நி-3)

## சர்வதேச கிரிக்கெட் தொடர்களில் நிக்கோலஸ் பூரன் ஓய்வு



மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான நிக்கோலஸ் பூரன் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

29 வயதே ஆன இளம் வீரர் சர்வதேச கிரிக்கெட்டி லிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளமை அவரது ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவர் வெஸ்ட் இண்டீஸ் அணிக்காக அதிக ரி-20 போட்டிகளில் (106 போட்டிகள்) விளையாடிய வீரராகவும் அதிக ஓட்டங்கள் குவித்த வீரராகவும் (2,275 ஓட்டங்கள்) சாதனை படைத்துள்ளார். அத்துடன் 61 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 1,983 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இத்தகைய சூழலில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடை பெற்றுள்ளார். இருப்பினும் வெளிநாடுகளில் நடைபெறும் ஐ.பி.எல். போன்ற லீக் தொடர்களில் தொடர்ந்து விளையாடவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-3)


## சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் ரி 10 கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த 7 ஆம் மற்றும் 8 ஆம் திகதிகளில் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இக்கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன. அரையிறுதிப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து சென் ஜோன்ஸ் கல்லூரியும் மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியும் மோதவுள்ளன.

அதனைத் தொடர்ந்து மதியம் 1 மணியளவில் மூன்றாம் இடத்திற்கான போட்டியும் மாலை 3 மணியளவில் இறுதிப் போட்டியும் இடம்பெறவுள்ளதென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-3)

## ஐ.சி.சியின் மே மாதத்திற்கான சிறந்த வீரராக மொஹமட் வசீம்



ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையைத் தேர்வு செய்து ஐ.சி.சி கௌரவித்து வருகின்றது. அதன்படி மே மாதத்திற்கான சிறந்த வீரர்களுக்குரிய விருதுகளைப் பெறும் ஆடவர் மற்றும் மகளிர் அணி வீரர்களின் பெயர்களை சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.

அதற்கமைய, மே மாதத்திற்குரிய சிறந்த ஆடவர் அணியின் வீரருக்கான விருதை ஐக்கிய அரபு இராச்சிய அணித் தலைவர் மொஹமட் வசீம் வென்றுள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான வரலாற்றுத் தொடர் வெற்றியை நோக்கி அணியை வழிநடத்திய தன் விளைவாக இரண்டாவது முறையாகவும் மாதத்திற் கான சிறந்த வீரர் விருதை அவர் பெற்றுள்ளார்.


முன்னதாக 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான சிறந்த வீரருக்கான விருதை மொஹமட் வசீம் பெற்றிருந்தார்.

மே மாதத்திற்கான, சிறந்த வீரருக்கான விருதுக்காக அவருடன், ஸ்கொட்லாந்தின் பிரண்டன் மெக்முல்லன் மற்றும் அமெரிக்காவின் மிலிந்த் குமார் ஆகியோரும் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். (நி-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம்

புருசோத்தமன் 03



கம்பவாரிதி இ.ஜெயராஜ்

**கம்பன் கழகம்**

புதுச்சேரிக் கம்பன் கழகம் இந்தியாவிலுள்ள கம்பன் கழகங்களிலெல்லாம் முதன்மையானது. 58 ஆவது கம்பன் விழாவை 2025 ஆம் ஆண்டில் புதுவைக் கம்பன் கழகம் நடத்தி முடித்துள்ளது.

58 ஆண்டுகளாகத் தொடர்ந்து கம்பன் விழாவைச் சிறப்பாக நடத்தி வருகின்ற புதுவைக் கம்பன் கழகத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பணியாற்றியவர்கள் பலர்.



மருத்துவர் ஶ்ரீஇரத்தினகுமார்

அதில் கோவிந்தசாமி முதலியார், தமிழாசிரியர் அருணகிரி, வழக்கறிஞர் முருகேசன் ஆகியோர் முதன்மைக்குரியவர்கள்.

அதிலும் புதுவைக் கம்பன் கழகத்தின் புரவலராக (போசகர்) புதுச்சேரி மாநிலத்தின் முதலமைச்சரே இருப்பார் என்பது கம்பன் கழகத்தின் யாப்பு.

அதேவேளை புதுவைக் கம்பன் கழகத்தின் முக்கிய பதவிகளில் புதுச்சேரிச் சட்டசபை உறுப்பினர்களும் அமைச்சர்களும் இடம் பெறுவதால், புதுவைக் கம்பன் கழகம் ஓர் அரசவைக் கழகம் போலவும் அக்கழகம் நடத்தும் கம்பன் விழா புதுச்சேரி அரசு நடத்துகின்ற விழாப் போலவும் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆம், புதுச்சேரியின் கம்பன் விழா என்றால் புதுவை நகரம் விழாக்கோலம் பூண்டு விடும்.

எங்கும் அலங்காரங்கள். எங்கும் விழா நிகழ்வுகள் அடங்கிய பதாகைகள்.

தவிர, விழா மண்டபத்தின் நுழைவாயிலில் விசேட அலங்காரம் என, புதுவை நகரம் புதுப்பொலிவு கொள்ளும்.

இப்போது கூட புதுவைக் கம்பன் கழகத்தின் செயலாளராகப் பதவி வகிக்கும் வே.பொ.சிவக்கொழுந்து அவர்கள் புதுச்சேரி சட்டசபையின் முன்னாள் சபாநாயகராக இருந்தவர். கழகத்தின் தலைவராக சு.செல்வகணபதி உள்ளார்.

கழகத்தின் 58 ஆவது கம்பன் விழா புதுவை நகராட்சி கம்பன் கலையரங்கில் 2025 மே 09, 10, 11 ஆகிய மூன்று தினங்கள் இடம் பெற்றன.

புதுச்சேரிக் கம்பன் விழாவின் பொருட்டே அங்கு செல்லுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைக்கப்பெற்றது.



கம்பநேசன் வாசுதேவா

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் அமைப்பாளர் இ.ஜெயராஜ் அவர்கள் புதுவைக் கம்பன் விழாவின் முக்கியப் பேச்சாளர். கடந்த காலங்களிலும் அவர் இல்லாத விழா அங்கு இல்லை எனலாம்.

மே 8 ஆம் திகதி அதிகாலைப்பொழுதில் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றோம்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுடன் மருத்துவர் ஶ்ரீஇரத்தினகுமார், கம்பநேசன் வாசுதேவா ஆகியோருடன் நானும் சேர்ந்து கொண்டேன்.


விமான நிலையத்திற்குள் நுழைந்த போது விமானப் பயணத்திற்காக நின்றிருந்த நம்மவர்களும் தமிழகத்தவர்களும் கம்பவாரிதியைக் கையெடுத்து வணங்கினர்.

அவருடன் புகைப்படம் எடுப்பதிலும் அவர்கள் காட்டிய ஆர்வம் நம்மை நெகிழ வைத்தது.

இதையும் கடந்து விமான நிலைய உத்தியோகத்தர்கள் கூடக் கம்பவாரிதிக்கு தங்களின் மானசிகமான மரியாதையை தங்கள் முகபாவனை மூலம் வெளிப்படுத்தி நின்றதையும் அங்கு காண முடிந்தது.



வே.பொ.சிவக்கொழுந்து



சு.செல்வகணபதி

மழை காரணமாக விமானம் உரிய நேரத்திற்குப் புறப்படவில்லை.

அதிகாலையில் தொடங்கிய விமானப் பயணப்பொழுது முற்பகல் 11 மணியளவில் சென்னை விமான நிலையத்தில் நிறைவுக்கு வந்தது.

என்னே ஆச்சரியம். சென்னை விமான நிலையத்திலும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு மிகுந்த மதிப்பு. கூடவே அவருடன் புகைப்படம் எடுக்கும் தங்களின் விருப்பத்தை மிகவும் பௌவ்யமாகக் கம்பவாரிதியிடம் கூற, அவரும் பெருந்தன்மையோடு அதனை ஏற்றுக் கொண்டார்.

விமான நிலையத்தில் இருந்து எங்களை ஏற்றிச் செல்வதற்கான வாகனம் நீண்ட நேரமாகக் காத்திருந்தது.

புதுவை முன்னாள் சட்டசபை சபாநாயகர் சிவக்கொழுந்து அவர்கள் அனுப்பி வைத்த வாகனத்தின் சாரதி சரவணன் கம்பவாரிதிக்கு ஏலவே பரீட்சயமானவர்.

இதையும் கடந்து கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் புதுவைக் கம்பன் விழாவிற்கு வருகிறார் என்ற செய்தியறிந்து கம்பவாரிதியின் மீளாத் தொண்டர்கள் சென்னை விமான நிலையத்திற்கு வந்திருந்தனர்.

இதில் சென்னை உயர் வள்ளுவம் அறக்கட்டளையைச் சேர்ந்த தாமோதரன் அவர்கள் முக்கியமானவர். கம்பன் விழா முடியும் வரை கம்பவாரிதிக்கு உற்ற உதவியாக அவர் இருந்தார்.

சென்னை விமான நிலையத்தில் இருந்து சுமார் மூன்று மணிநேரப் பயணத்தில் புதுச்சேரியை அடைய முடிந்தது.

வாகன சாரதி சரவணனிடம் இருந்த தொழில் நிதானம், அடக்கம், கம்பவாரிதி மீது அவர் கொண்ட பக்தி என்பவற்றை எல்லாம் கண்ணுற்ற போது மனம் உருகிப்போனது.

புதுச்சேரி நகராட்சியில் அண்ணாசாலையில் உள்ள ராம் விடுதியில் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கம்பவாரிதி அங்கு வருவதற்கு முன்னதாகவே அவரின் தொண்டர்கள் அங்கு வந்து காத்திருந்தனர்.

கம்பவாரிதியைக் கண்டதும் அவரின் காலில் சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கினார்கள்.

ஆம், தனது குருநாதர் விசுவாமித்திரரின் யாகத்திற்குத் துணையாக இராம பிரான் சென்றார் என்பதை கம்பராமாயணத்தில் கற்றிருந்தாலும் கம்பவாரிதியின் தொண்டர்கள் அவர் மீது கொண்ட அளவு கடந்த அன்பையும் அவருக்குப் பணிவிடை செய்வதைத் தமது பேறாகக் கருதியதையும் பார்த்த போது, யார் பெறுவார் இப்பெருமை என்றே எண்ணத் தோன்றியது.

கூடவே கம்பவாரிதி அவர்கள் வந்து சேர்ந்த சில மணித்துளிகளில் புதுவைக் கம்பன் கழகத்தின் பொதுச்செயலாளரும் முன்னாள் சட்டசபை சபாநாயகருமான வே.பொ.சிவக்கொழுந்து அவர்கள் நேரில் வந்து கம்பவாரிதியைச் சந்தித்தார். அவருடன் பிரமுகர்கள் சிலரும் அங்கு வந்திருந்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் 2025 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான முழு நேர கற்கை நெறிகள் 01.07.2025 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், முச்சக்கரவண்டி பொறிவலர், அலுமினியம் பொருத்துநர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர், விரைவு சேவை உணவு வழங்குநர், குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துநர், மரவேலை தொழில் நுட்பவியலாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டர்) கட்டட நிர்மான உதவியாளர் போன்ற கற்கைநெறிகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் - 4 (NVQ - 4) சான்றுதழுக்கான பயிற்சி நெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 13.06. 2025 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களினை பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949, 071 031 8737, 077 613 9307 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என பிரதிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள்ளர். (நி-8)

## திருஞான சம்பந்தர் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைநடத்தும் திருஞான சம்பந்தர் குருபூசை தினம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சைவபரிபாலன சபை ஆச்சிரம மண்டபத்தில், சைவபரிபாலன சபையின் உப தலைவர் பி.என் சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இங்கு வரவேற்புரையினை கலாநிதி பா. காசிநான், ஆசிரியர் உரையினை யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை திருமதி ர.அழகுராசா நிகழ்த்தவுள்ளதுடன் திருமுறை ஓதுதல், பண்ணிசை, பஜனை, பேச்சு மற்றும் கதாப்பிரசங்கம் ஆகிய வற்றை யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களும் ஆற்றவுள்ளனர். (3)

## போதனாசிரியர்களிற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)


இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள பின்வரும் கற்கைநெறிகளிற்கான போதனாசிரியர்கள் வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மின்னியலாளர், கட்டட நிர்மாணத்துறை, கணனிப்பட வடிவமைப்பாளர், குளிர்சாதன மற்றும் வளிசீராக்கி தொழில் நுட்பவியலாளர் , அலுமினியம் பொருத்துநர், காய்ச்சி இணைப்பவர், மோட்டார் சைக்கிள் பொறிவலர், முச்சக்கரவண்டி பொறிவலர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், தையலாளர், கணனி வன்பொருள் திருத்துநர், அறைபராமரிப்பாளர்.


க.பொ.த (சாதாரண தர) தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் NVQ-4 உடன் NVQ-5 அல்லது அதற்கு மேல் தொழில் தகைமை சான்றிதழ் உடன் 1 வருடம் கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேலான தொழில்துறை அனுவம் தேவை.

எனவே மேற்படி தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுய விபரக் கோவை மற்றும் கல்வி, தொழிற்கல்வி, அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 13.06. 2025 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப்பணிப்பாளர்/ இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் அல்லது நேரில் சமர்ப்பிக்குமாறு பிரதிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (நி-8)



சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.



மண்டைதீவு கடலில் படுகொலை செய்யப்பட்ட 32 கடற்றொழிலாளர்களுக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, குருநகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்திற்குச் சென்று மலர்தூவி, மெழுகுவர்த்தி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 250 | 350 | 500 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 500 | 700 | 800 |
| தக்காளி | 600 | 700 | 700 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 | 240 |
| கோவா | 450 | 600 | 550 | 350 | 600 |
| கரட் | 800 | 750 | 700 | 700 | 900 |
| பூசணி | 100 | 180 | 160 | 150 | 200 |
| புடோல் | 150 | 160 | 200 | 180 | 300 |
| வாழைக்காய் | 120 | 120 | 150 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 150 | 115 | 120 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 200 | 200 | 320 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 350 | 150 |
| லீக்ஸ் | 350 | 480 | 400 | 350 | 500 |
| பீற்றூட் | 600 | 500 | 550 | 400 | 600 |
| கறிமிளகாய் | 500 | 800 | 600 | 600 | 1200 |
| முருங்கைக்காய் | 1400 | 1600 | 1200 | 1200 | 1700 |
| போஞ்சி | 400 | 650 | 600 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 400 | -- | 450 |
| கீரை - 1 பிடி | 120 | 80-150 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 240 | 250 | 100-220 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 600 | 700 | 700 |
| முள்ளங்கி | 250 | 200 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | - | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்ச்சைக்குரிய கொள்கலன்கள் பகிரங்க விசாரணை அவசியம்

## சஜித் வலியுறுத்து

(கொழும்பு)

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள் கலன்கள் தொடர்பில் வெளிப்படையான விசாரணை அவசியம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனவரி மாதம் சுங்கத்தின் எந்தவித பரிசோதனைகளும் இல்லாமல் சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பாக கடுமையான சர்ச்சைகள் எழுந்துள்ளன. இந்தக் குற்றச்சாட்டை அரசியல்வாதிகளை விடுத்து முதலில் சுங்கத் தொழிற்சங்க ஒன்றியமே முன்வைத்தது.

சுங்கப் பணியாளர்கள் சங்கம் மற்றும் சிரேஷ்ட சுங்க அதிகாரிகள் உட்பட சுங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலான தரப்பினர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர். முறையான பரிசோதனை நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படாது அதிக ஆபத்துள்ள கொள்கலன்கள் சில நாட்களுக்குள் அவசரமாக விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்கலன்களை விடுவிப்பதால் நாட்டிற்குக் சேர வேண்டிய வருவாய் இழப்பு, தடைசெய்யப்பட்ட பொருட்களை விடுவித்தமை என பிரச்சினையொன்று தானாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். முன்னர் தடை விதிக்கப்பட்ட தரப்பினரின் கொள்கலன்களும் இதில் அடங்கியுள்ளன. இது குறித்து அரசாங்கத்திடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் எதுவும் நடக்கவில்லை.

இந்த விசாரணையின் வெளிப்படைத்தன்மையில் சிக்கல்கள் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். கொள்கலனை பரிசோதனை செய்யும் உபகரணங்களுக்காக பில்லியன் கணக்கில் செலவிடப்படுகின்றன. ஆனால் இன்று 60% கொள்கலன்கள் எந்தவித பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதில்லை. இந்தக் கொள்கலன்களை பரிசோதனைக்கு உட்படுத்தாமல் ஆபத்தான பொருட்கள் இல்லை என்று எவ்வாறு கூற முடியும் ? இது பெரும் பேசுபொருளுக்கு வழிவகுத்துள்ளது. இதில் ஆயுதங்கள் இருந்ததாகவும் பேசப்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில், இதனால் தேசிய பாதுகாப்புக்கு பெரும் ஆபத்து காணப்படுவது தெளிவாகத் தெரிகிறது.

எனவே. இது குறித்து வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை நடத்துமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (நி-8)

## இந்தியாவுடனான ஒப்பந்தம்:

# உண்மைத் தன்மையை வெளிப்படுத்துங்கள்

## ராஹுல தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் 323 கொள்கலன்கள் விவகாரம் தொடர்பான உண்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என பேராசிரியர் கொடபிடியே ராஹுல தேரர் தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கலந்துக் கொண்டார். பாரம்பரியமான அரசியல் கட்சிகள் மீது அதிருப்தியடைந்த நிலையில் தான் நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்தை தெரிவு செய்தார்கள்.

குறுகிய காலத்துக்குள் மக்களின் எதிர்பார்ப்பு பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. மக்களின் எதிர்பார்ப்பு, அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

சட்டத்துக்கு அமைய அரசாங்கம் செயற்பட வேண்டும். இருப்பினும் அரசாங்கம் சட்டத்துக்கு அப்பாற்பட்டு செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

பரிசோதனைகள் ஏதுமின்றி 300 இற்கும் அதிகமான கொள்கலன்கள் சட்டவிரோதமான முறையில் விடுவிக்கப்பட்டதாக ஊடகங்களில் குறிப்பிடப்படுகிறது. அத்துடன் இந்தியாவுடன் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்தும் கேள்வியெழுப்பப்படுகிறது.

இதன் உண்மைத் தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-8)

# ராஜபக்ஷக்களைச் சிறையில் தள்ள பாடுபடும் அநுர அரசாங்கம்

## சமல் குற்றச்சாட்டு



(கொழும்பு)

கண்டபடி விசாரணைக்கு அழைத்து - பொய்யான வழக்குகளைத் தாக்கல் செய்து ராஜபக்ஷக்களையும் அவர்களின் நெருங்கிய சகாக்களையும் சிறையில் தள்ள அநுர அரசாங்கம் அயராது பாடுபடுகின்றது என முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமல் ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படலாம் எனச் சில நாட்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. 2022ஆம் ஆண்டு மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையின்போது திஸ்ஸ மஹாராமவில் உள்ள தனது வீடு மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டன எனத் தவறான தகவலை சமல் ராஜபக்ஷ அளித்துள்ளார் எனவும், அதற்காக அரசிடம் இருந்து ஒரு கோடியே 50 இலட்சத்து 21 ஆயிரத்து 600 ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் அவர் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார் எனவும் அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே சமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், "நாம் ஊழல், மோசடிகளைச் செய்யவில்லை.

அநீதிகளை இழைக்கவில்லை. நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் எம்மை அர்ப் பணித்துப் பணியாற்றினோம். வெளிநாடுகளின் சதி முயற்சியாலும், அன்றைய எதிரணிகளின் கூட்டுச் சூழ்ச்சியாலும் ஆட்சியில் இருந்து நாம் விலக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இன்று இந்த அரசு எம்மைச் சிறையில் தள்ள படாதபாடு படுகின்றது.

எம்மைச் சிறையில் அடைத்தாலும் நாம் மீண்டு வருவோம்." எனத் தெரிவித்தார். (நி-8)


பாராட்டி வாழ்த்துகிறோம்




எமது பாடசாலையின் ஆசிரியர்
செல்வி. டிலக்ஷா சண்முகராஜா
அவர்கள் ஆசிரியர் கல்வியியலாளர் சேவை III பதவி உயர்வு பெற்றுள்ளார்.
அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.
Congratulations
வாழ்த்துவோர்-
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
யாழ்ப்பாணம்.
(4515)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



88 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



கீர்த்தி ஸ்ரீ தேசபந்து வைத்தியபிமானி
Dr.வேலுப்பிள்ளை தேவராசன் (D.A.M)
Happy Birthday
11.06.2025
88 ஆவது அகவையில் கால்பதிக்கும் எங்கள் குடும்பத்தின் ஆணிவேர் இன்னும் நூறாண்டு நோய் நொடியின்றி வாழ வாழ்த்தி மகிழ்கின்றோம்.
27, உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.
077 047 0609.
அன்புடன் வாழ்த்தும்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள், மைத்துனர்கள்.



மணிவிழா வாழ்த்து



திருமதி
வாசுகி சச்சிதானந்தம்
(Primary Trained, B.A, Dip.in.Edu, M.Ed)
(பிரதி அதிபர் யா/மல்லாகம் மகா வித்தியாலயம்)
சேவை விபரம்
- யா/ கோட்டைக்காடு அ.த.க பாடசாலை முதல் நியமனம்–28.03.1990
- யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயம் 01.03.1993 – பகுதித்தலைவர்
- யா/ கோட்டைக்காடு அ.த.க பாடசாலை 10.08.2012–21.02.2017 கடமை நிறைவேற்று அதிபர்
- யா/ மல்லாகம் மகா வித்தியாலயம் 22.02.2017–10.06.2025 பிரதி அதிபர்

35 வருட சேவையில் 3 வருடங்கள் ஆசிரியராகவும் 19 வருடங்கள் பகுதித் தலைவராகவும் 5 வருடங்கள் கடமை நிறைவேற்று அதிபராகவும் 8 வருடங்கள் எமது பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றி 11.06.2025 இன்று ஓய்வு பெறும் திருமதி. வாசுகி சச்சிதானந்தம் அவர்களுக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமையவும் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.
(4500)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நிவாரணக் கப்பலுடன் சென்ற எம்மை இஸ்ரேல் வழிமறித்து விட்டது

### சுற்றுச் சூழல் ஆர்வலர் கிரேட்டா தன்பெர்க்



(ஜெருசலேம்)
காசாவுக்குச் செல்லும் நிவாரணக் கப்பலான மேட்லீனில் இருந்த 11 பேருடன் சேர்த்து தானும் இஸ்ரேலியப் படைகளால் இடைமறித்துக் கடத்தப் பட்டதாக சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரேட்டா தன் பெர்க் கூறியுள்ளார்.

அதன்பின் அவர் பாது காப்பாக இருப்பதாக இஸ் ரேல் தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை அதி காலை காசாவை நோக் கிச் சென்ற போது, மேட்லீன் நிவாரணக் கப்பலை இஸ்ரே லியப் படைகள் இடை மறித்தன.

அது தொடர்பாக காணொளி ஒன்றில் பேசிய கிரேட்டா தன்பெர்க், "இந்த வீடியோவை நீங்கள் பார்த்தால், நாங்கள் சர்வதேச நீரில் தடுத்து நிறுத்தப்பட்டு கடத்தப்பட் டுள்ளோம். என்னையும் மற்றவர்களையும் விரை வில் விடுவிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும்" என்று அவர் வலியுறுத் தினார். ஜூன் 1 ஆம் திகதி மேட்லீன் கப்பல் காசாவில் உணவுப் பற்றாக்குறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இத்தாலியில் இருந்து புறப்பட்டது.

காசாவை ஐக்கிய நாடுகள் சபை "பூமியில் மிகவும் பசியுள்ள இடம்" என்று அழைத்தது. 21 மாதப் போருக்குப் பிறகு, காசாவில் உள்ள முழு மக்களும் பஞ்சத்தின் ஆபத்தில் இருப்பதாக ஐ.நா எச்சரித்தது.

சர்வதேச கடல் பகுதி யில் மேட்லீன் கப்பல் இடைமறிக்கப் பட்டதை துருக்கி "கொடூரமான தாக் குதல்" என்று கண்டித்தது. ஈரானும் இதை "இது ஒரு வகையான கடற்கொள் ளையர் செயல்" என்று கண்டித்தது குறிப்பிடத் தக்கது. (நி-8)

## விமானத்தில் ஏறும் போது தடுமாறிய ட்ரம்ப்

(வோஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் நியூஜெர்சி மாகாணம் மோரிஸ் டவுண் விமான நிலையத்தில் இருந்து மேரிலண்ட் மாகாணத் திற்கு ஏர்போர்ஸ் ஒன் விமானத்தில் புறப்பட் டார்.

விமானத்தில் ஏறு வதற்காக படிக்கட்டில் ஏறிக்கொண்டிருந்தபோது திடீரென அவர் நிலை தடுமாறினார்.

படிக்கட்டில் கீழே விழுவதுபோல் கால் தடுமாறிய ட்ரம்ப் உட னடியாக சுதாரித்துக் கொண்டார். பின்னர், அவர் படிக்கட்டில் ஏறி விமானத்திற்குள் நுழைந் தார்.

இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூகவலைதளத்தில் தற்போது வைரலாகி வருகிறது.

இதையடுத்து டொனா ல்ட் ட்ரம்பால் படிக்கட்டு களில் கூட ஏறமுடியாது, அவர் ஜனாதிபதியாக இருக்க தகுதியற்றவர் எனவும் சமூக ஊடக பயனர்கள் கருத்து தெரிவித்து வருகின் றனர்.

இதேபோன்று அமெ ரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் விமானத்தில் ஏறும்போது அடிக்கடி நிலைதடுமாறி கீழே விழுந்த சம்பவங்கள் அரங்கேறி சமூக வலைதளத்தில் வைர லான நிலையில் டொனால்ட் ட்ரம்ப் கேலி செய்த வீடியோக்களும் தற்போது வைரலாகி வருகின் றமை குறிப்பிடத்தக் கது. (நி-8)



## தொடரும் போர்ப் பதற்றம்! நிறுத்தப்பட்ட விமான சேவைகள்!

(மொஸ்கோ)
உக்ரைன் தொடர்ந்து ட்ரோன் தாக்குதல் நடத்தி வருவதால், மொஸ்கோ விமான நிலையத்தில் விமான சேவைகள் தற் காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையில் போர் நடந்து வருகிறது. போரை நிறுத் துவதற்கான முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்துள்ளன.

கடந்த சில நாட்களுக்கு முன்னர், ரஷ்யா விமானப் படை தளம் மீது உக்ரைன் அதிரடி தாக்குதல் நடத் தியது.

ட்ரோன் மூலம் நடத்தப் பட்ட இந்த தாக்குதலில் 40 ரஷ்ய போர் விமானங்கள் தகர்க்கப்பட்டன. இந்த போர் தொடங்கியதற்கு பிறகு, ரஷ்யா மீது உக்ரைன் நடத்திய மிகப்பெரிய தாக்குதலாக இது பார்க்கப்பட்டது.

இதற்கு பதிலடியாக, உக்ரைன் மீது ரஷ்யா 400 ட்ரோன்களையும், 40 ஏவுகணைகளையும் வீசி தாக்குதல் நடத்தியது.

தற்போது ரஷ்யாவில் பல்வேறு இடங்களில் உக் ரைன் தொடர்ந்து ட்ரோன் தாக்குதல் நடத்தி வரு வதால் மொஸ்கோ விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக் கப்பட்டுள்ளது.

இரண்டு மணி நேரத் தில் உக்ரைனின் 76 ட்ரோன்களை அழித்ததாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையமான ரோசா வியாட்சியா பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விமானங்களை தற்காலிக மாக நிறுத்தி வைத்துள் ளது.

தற்போது உக்ரை னுக்கு மிகப்பெரிய பதிலடி கொடுக்க ரஷ்யா தீவிரமாக செயற்பட்டு வருகிறது என அந்நாட்டு நிபுணர்கள் தெரி வித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-8)




## ட்ரம்
## வலு
### வன்முறை

(வோஷிங்
அமெரிக்காவி
சட்டவிரோதம
நாடு கடத்தும் ந
அமெரிக்க
ட்ரம்பிற்கு எதிர
வடைந்துள்ளன




## வீதிகளில் ந
## அழைத்துச் செ

(டெஹ்ரான்)
ஈரானில் உள்ள 20 நகரங் களில் உள்ள வீதிகளில் நாய் களை நடைப்பயிற்சிக்கு அழைத் துச் செல்வதற்கு ஈரான் அரசு தடைவிதித்துள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு ஈரானின் தலைநகர் டெஹ்ரானில் உள்ள தெருக்களில் நாய்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ம்பிற்கு எதிராக
# வடையும் போராட்டம்

## றையாக உருவெடுத்த எதிர்ப்புப் போராட்டம்

**ங்டன்)**

**வின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மாகக் குடியேறியவர்களை நடவடிக்கையில் ஈடுபட்டதால் ஜனாதிபதி டொனால்ட் திராகப் போராட்டங்கள் வலு ன.**







அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில், சட்ட விரோதமாகக் குடியேறிய 44 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். இதனால் அங்கு இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டம் வன்முறை யாக உருவெடுத்தது. போராட்டத்தை கட்டுப் படுத்த என்.ஜி., எனப்படும் தேசிய காவல் படை பொலிஸாரை அனுப்பி வைத்து ட்ரம்ப் அதிரடி நடவடிக்கை எடுத்தார்.

இந்நிலையில் ஜனா திபதி ட்ரம்ப் அரசின் செயற்பாடுகளால் ஆத்திர மடைந்த கலிபோர்னிய ஆளுநர் கவின் நியூஸ்கம் உள்ளூர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

ஆனாலும் வன்முறை சம்பவங்களை கட்டுப்ப டுத்த, நூற்றுக்கணக்கான அமெரிக்க கடற்படையினர் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

700 கடற்படையினர் லொஸ் ஏஞ்சல்ஸிற்கு அனுப்பப்பட்டு உள்ளதாக அமெரிக்காவின் வடக்கு கட்டளைப்பிரிவு தெரிவித் துள்ளது.

இந்த கடற்படையினர், ஏற்கெனவே அங்குள்ள தேசிய பாதுகாப்புப் படை யினருக்கு ஆதரவாக செயற்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியா கவர் னர் கவின் நியூசம் மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் ஆளு நர் கரேன் பாஸ் ஆகி யோர், கடற்படையினரின் வருகை தேவையற்றது என்றும், இது நிலை மையை மேலும் மோச மாக்கும் என்றும் வன் மையாகக் கண்டித்துள் ளனர். (நி-8)

---

# நாய்களை
# செல்லத் தடை

நடைப்பயிற்சிக்கு அழைத்துச் செல்ல முதலில் தடைவிதிக் கப்பட்டது.

நாய்களை நடைப்பயிற் சிக்கு அழைத்து செல்வ தனால், பொதுமக்களுக்கு ஏற்படும் சுகாதார சீர்கேடு மற்றும் பாதுகாப்புக் காரணங் களுக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஈரான் அதிகாரிகள் தெரி வித்தனர்.

இதைத் தொடர்ந்து இந்த உத்தரவு மேலும் 20 நகரங்களுக்கு விரிவாக்கம் செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

கெர்மன்ஷா, லாம், ஹமதான், கெர்மன், போரோஜெர்டு, ரோபர்ட் கரீம், லாவாசனத், கோல் ஸ்டன் உள்ளிட்ட நகரங்களிலும் நாய் களை நடைப்பயிற்சிக்கு அழைத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள் ளது.



இந்த உத்தரவை மீறும் நாய் உரிமையா ளர்கள் கைது செய்யப் படுவார்கள் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LOLC குழுமம் ரூ.41 பில்லியன் லாபம் ஈட்டியுள்ளது மற்றும் மொத்த சொத்துக்களில் ரூ.2 டிரில்லியனை மிஞ்சியுள்ளது. உலகளாவிய வளர்ச்சியின் வேகத்தால் இயக்கப்படுகிறது.



LOLC குழுமம் 2024/25 நிதியாண்டில் ரூ. 41 பில்லியன் வரிக்குப் பிந்தைய இலாபத்தைப் பதிவு செய்துள்ளது, இது முந்தைய ஆண்டை விட 89% அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது, மேலும் இது ரூ. 48 பில்லியன் இயக்க இலாபத்தின் ஆதரவுடன். நிதிச் சேவைகளில் நிலையான விரிவாக்கம், தொடர்ச்சியான மூலோபாய சர்வதேச கையகப்படுத்துதல்கள் மற்றும் இலங்கையில் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றால் இந்த வலுவான செயற்திறன் தூண்டப்பட்டது.

தற்போது 25க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு வரும் LOLC, நிதி சேவைகள், விவசாயம், பெருந்தோட்டம், வாகனம், உற்பத்தி, கட்டுமானம், கடல்சார், மின் உற்பத்தி, மருந்துகள் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றில் செயல்படும் இலங்கையின் மிகவும் சர்வதேச அளவில் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனக் குழுவாக தனது நிலையை தொடர்ந்து உறுதிப்படுத்துகிறது. குழுவின் மொத்த சொத்துக்கள் 17% உயர்ந்து ரூ. 2.03 டிரில்லியனாக உயர்ந்தன, அதே நேரத்தில் பங்குதாரர்களின் பங்கு மதிப்பு ரூ. 343 பில்லியனாக உயர்ந்து 15% அதிகரிப்பைக் குறிக்கிறது. அதன் மொத்த கடன்-பங்கு விகிதம் 1.2 மடங்கிலிருந்து 1.05 மடங்காக மேம்பட்டது, இது செயலில் உள்ள முதலீட்டு குழாய் இருந்தபோதிலும் அதிக இருப்புநிலைக் குறிப்பின் வலிமையைக் குறிக்கிறது.

**ஆபிரிக்க விரிவாக்கம் உலகளாவிய நிதியை வலுப்படுத்துகிறது**

கடந்த ஆண்டில் LOLC இன் முதலீட்டு மூலோபாயம் ஆபிரிக்காவின் தேயிலை துறையில் கையகப்படுத்துதல்களை முக்கியமாகக் கொண்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு ஃபின்லேஸின் கென்ய செயற்பாடுகளை கையகப்படுத்தியதைத் தொடர்ந்து, குழுமம் கென்யா, ருவாண்டா மற்றும் தான்சானியாவில் உள்ள லிப்டனின் தோட்டங்களை கையகப்படுத்தியது. இந்த பரிவர்த்தனைகள் LOLC இன் உண்மையான பொருளாதாரத் துறைகளில் ஆழ்ந்த ஆர்வத்தையும், உலகளாவிய தேயிலை விநியோகச் சங்கிலியில் முக்கிய பங்கு வகிக்கும் நோக்கத்தையும் பிரதிபலிக்கின்றன.

**நிதி சேவைகள் தொடர்ந்து வருவாயை அதிகரிக்கின்றன**

நிதிச் சேவைகள் குழுமத்தின் இலாபத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வருகின்றன, இந்தப் பிரிவு தொடர்ச்சியான செயற்பாடுகளிலிருந்து வரிக்கு முந்தைய ரூ. 52 பில்லியன் இலாபத்திற்கு ரூ. 41 பில்லியனை பங்களித்துள்ளது, இது குழுவின் முதன்மை வருவாய் இயந்திரமாக அதன் நிலையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. துறை ரீதியான பல்வகைப்படுத்தல் வருவாய் மீள்தன்மையை ஆதரிக்கிறது



நிதிச் சேவைகளுக்கு அப்பால், LOLC இன் உற்பத்தி மற்றும் வர்த்தகப் பிரிவு வட்டிக்கு முன் ரூ. 4.2 பில்லியன் செயற்பாட்டு இலாபத்தை ஈட்டியது. இலங்கையின் நாணய நிலைப்படுத்தல், பணவீக்கத்தைக் குறைத்தல் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் மீட்சி போன்ற சாதகமான பொருளாதார குறிகாட்டிகளால் இது பயனடைந்தது.

சுற்றுலாத் துறையில், குழுமத்தின் ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு வணிகங்கள் வட்டிக்கு முன் ரூ. 2.8 பில்லியன் இயக்க இலாபத்தை ஈட்டியுள்ளன, இது சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட மீட்சியின் ஆதரவுடன். உள்வரும் பயண அளவுகள் கொவிட்டிற்கு முந்தைய நிலைகளை நெருங்கி வருவதால், இலங்கை, மாலைதீவுகள் மற்றும் மொரீஷியஸில் உள்ள LOLC இன் விருந்தோம்பல் சொத்துக்கள் வரும் ஆண்டில் மேலும் பயனடையத் தயாராக உள்ளன.

LOLC இன் முடிவுகள், உயர் வளர்ச்சி எல்லைப்புற சந்தைகள் மற்றும் இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதாரம் இரண்டிலும் வலுவான இருப்புடன், பன்முகப்படுத்தப்பட்ட, உலகளாவிய ரீதியாக பொருத்தமான நிறுவனத்தை உருவாக்குவதற்கான அதன் மூலோபாய இலட்சியத்தை பிரதிபலிக்கின்றன. நிதி சேவைகள், விவசாயம், தோட்டக்கலை, வாகனம், உற்பத்தி, கட்டுமானம், கடல்சார், மின் உற்பத்தி, மருந்துகள் மற்றும் ஓய்வு ஆகியவற்றை உள்ளடக்கிய அதன் பல்துறை இலாகா, எந்தவொரு ஒற்றைச் சந்தை அல்லது துறையின் வெளிப்பாட்டைக் குறைக்க உதவியுள்ளது.

**இஷார நாணயக்கார, தலைவர்**
**LOLC ஹோல்டிங்ஸ் பிஎல்சி.**

# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி-பா-49
உயரம்: 6'2"
தகைமை/தொழில்: BCom,DO
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15609

பிறப்பு:1997-RC
நட்சத்திரம்:பூரட்டாதி
உயரம்:5'6"
தகைமை/தொழில் -Diploma.
விளையாட்டு பயிற்றுவிப்பாளர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15610

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:கேட்டை
1இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்:
BA,MA,HNDE,Lecturer(pvt)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15611

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
கி-பா-12 1/2
10ல் சூரிசெவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BSc,Civil Engineer
எதிர்பார்ப்பு: ITfield, Engineer
தொ.இ: B/15613

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்:பூசம்
கி-பா- 37 1/2
உயரம்:5'7"
தகைமை/தொழில்: Canada
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15614

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-2002-இந்து
நட்சத்திரம்: ரேவதி
11இல்சூரி செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Dip in Icing
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15620

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்-கேட்டை
2இல்சூரிசெவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு.விவாகரத்தானவர்
தொ.இ: G/15624

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்-அச்சுவினி
கி.பா -24
உயரம்-5"
தகைமை/தொழில்: BA, Tution
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15627

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:கேட்டை
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -சித்த மருத்துவர்
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15628

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்:மூலம்
8இல்சூரி செவ்
கி.பா-70
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - Bio Tech
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்.
தொ.இ: G/15637

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 076 097 3120**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**

# வர்த்தக உலகம்

## 2025 ஆம் ஆண்டுக்கான வியாபார முகவர் மாநாட்டில் ONL "ABOVE & BEYOND" வரை செல்கின்றது.




2025 ஏப்ரல் 30 - ONL (வரையறுக்கப்பட்ட Office Network) தனியார் நிறுவனம் வரையறுக்கப்பட்ட Brother International Singapore தனியார் நிறுவனத்துடன் இணைந்து, அதன் வியாபார முகவர் வலையமைப்பின் வெற்றியையும், அடுத்த ஆண்டிற்கான செயற்திறன்மிக்க திட்டங்களையும் வெளியிட்டு, கொழும்பு ஷாங்க்ரி-லா ஹோட்டலில் அதன் 2025 ஆம் ஆண்டின் வியாபார முகவர் மாநாட்டை வெற்றிகரமாக கொண்டாடியது. இம் மாநாடு இவ் ஆண்டின் கருப் பொருளான "ABOVE & BEYOND" புதுமை, கூட்டாண்மை மற்றும் செயற்திறனில் எல்லைகளைத் தாண்டுவதற்கான ONL இன் அர்ப்பணிப்பைப் பிரதிபலித்தது.

2024/25 நிதியாண்டில் வணிக பங்குதாரர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை கண்டறிந்து கொள்ளவும் பாராட்டுவதற்கும் இந்நிகழ்வு ஒரு தளமாக செயற்பட்டது. இந்நிகழ்வில் வலையமைப்பின் சிறப்பையும் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டி பல்வேறு வணிகப் பிரிவுகளில் சிறந்த செயற்திறன் கொண்டவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. நிகழ்வின் முக்கிய சிறப்பம்சமாக, வாடிக்கையாளர் கருத்துகளால் இயக்கப்படும் முன்னேற்றங்களைக் கொண்ட புதிய தொடரான Ink Tank-based inkjet printers களை அறிமுகப்படுத்துவதாக இருந்தது.

தயாரிப்பின் அறிமுகத்தை பிரதர் இன்டர்நேஷனல் சிங்கப்பூரின் (Brother International Singapore) பிராந்திய விற்பனை பிரதிநிதி திரு. ஆண்டி சுவா மற்றும் ONL இன் பணிப்பாளர் திரு. வெஸ்லி பண்டாரா ஆகியோர் வழங்கினர். இப்புதிய தயாரிப்பானது வாடிக்கையாளரின் அச்சிடும் திறனை ஆதரிப்பதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2025/26 நிதியாண்டிற்கான எதிர்பார்க்கப்படும் முன்னறிவிப்புகளை கோடிட்டுக் காட்டும் ஒரு எதிர்கால திட்டம் மற்றும் எதிர்காலத்தில் ONL இன் எதிர்பார்ப்புகள் மற்றும் தொலைநோக்குப் பார்வை பற்றிய [illegible] ஆகியனவும் இந்நிகழ்வில் உள்ளடக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றாலை மின் உற்பத்தி, கனியமணல் அகழ்வுக்கு எதிராக

# இன்று மாபெரும் கவனயீர்ப்பு பேரணி

## மன்னார் பிரஜைகள் குழு அழைப்பு!

(மன்னார்)

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் கவனயீர்ப்பு பேரணிக்கு அனைத்து தரப்பினரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்க பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இன்று புதன் கிழமை மன்னாரில் இடம்பெற உள்ள கவனயீர்ப்பு பேரணியில் அனைவரும் கலந்து கொண்டு ஆதரவை வழங்குமாறு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இடம் பெற்று வருகிறது.

காற்றாலை மின் உற்பத்தி மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் செயற்திட்டமாக காணப்பட்டாலும், குறித்த காற்றாலைகள் அமைக்கப்படும் இடம் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

மேலும் மன்னார் தீவு மற்றும் பெரு நிலப்பரப்பிலும் கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை தெரிவித்து வருகின்ற போதும், குறித்த நடவடிக்கை தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

எனவே மக்களின் வாழ்வியலை பாதிக்கின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புக்கள் ,மீனவ அமைப்புகள் உள்ளடங்கலாக சிவில் அமைப்புக்கள் இணைந்து இன்று புதன்கிழமை காலை மன்னாரில் கவனயீர்ப்பு பேரணி ஒன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலை 9 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியில் ஆரம்பமாகி பிரதான வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை பேரணி சென்றடையும்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டிய கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கி வைக்கப்படும்.

எனவே குறித்த பேரணியில் மன்னார் மாவட்ட மக்கள், வர்த்தகர்கள் உள்ளடங்கலாக அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு எமது இருப்பை தக்க வைக்க அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (8-285)



யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீட 33 ஆவது அணியினரின் ஏற்பாட்டில் பொசன் தினமான நேற்று சவ்வரிசி கஞ்சி அறிவியல் நகர் சந்தியில் வைத்து வழங்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

# 80 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

(தருமபுரம்)



கிளிநொச்சியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக கடந்த 9 ஆம் திகதி கசிப்பு உற்பத்தி நடைபெற்ற குமாரசாமிபுரம் பகுதி அமைந்துள்ள வாய்க்கால் பகுதியைச் சுற்றி வளைத்த பொழுது கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள், 80 லீற்றர் கசிப்பு ஆகியவற்றை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை கிளிநொச்சி நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (8-316)



பௌத்த மக்களின் விசேட தினமான பொசன் பூரணை நாளை முன்னிட்டு வவுனியாவில் நேற்றையதினம் 22 இடங்களில் தன்சல் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றதுடன், பெருமளவான மக்கள் அதனை பெற்றுக் கொண்டதையும் அவதானிக்க முடிந்தது. (படம்:வசந்தரூபன்)



வரலாற்று சிறப்புமிக்க முல்லைத்தீவு பாண்டியன் குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் அன்னதான மண்டபத்திற்கான அடிக்கல் கடந்த 5 ஆம் திகதி நாட்டி வைக்கப்பட்டது.

# இராசிபலன்

11.06.2025
வைகாசி 28, புதன்கிழமை
பூரணை பிற்பகல் 1.38 மணிவரை

கேட்டை முன்னிரவு 8-49 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை

சந்திராஷ்டமம்- பரணி,கார்த்திகை.

**வளவன்**




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு.




சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவிற்கேற்ப வருமானம் கிடைக்கும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.




பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




உறவினர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பயணங்களால் பலனுண்டு, காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள்.




பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்புண்டு.




வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.




அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலையுண்டு, புதிய முயற்சிகளை யோசித்து ஏற்பது நல்லது.

**மற்றவர்களை நம்பும் அளவுக்கு உன்னையே நீ நம்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 795





"எதைப் பற்றிச் சொல்லுகிறாய்?" என்று ஆதித்த கரிகாலன் கேட்டான். "கிழவியைப் பாடமாட்டேன் என்று சொன்னதைத் தான்!"

"அது என்ன எனக்குத் தெரியாதே? விவரமாகச் சொல்" என்றான் ஆதித்த கரிகாலன்.

சுந்தரமூர்த்தி நாயனார் க்ஷேத்திர யாத்திரை செய்து கொண்டு வந்த பொழுது திருமுதுகுன்றம் என்னும் விருத்தாச்சலத்துக்கு வந்தார். வழக்கம் போல் அந்த ஊர் சிவாலயத்துக்குச் சென்றார். பட்டர்கள் நாயனாருக்கு சுவாமி தரிசனம் பண்ணுவித்து, "எங்கள் ஊர் இறைவன் பேரிலும் பதிகம் பாடி அருள வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டார்கள்.

"பார்ப்போம், இந்த ஆலயத்திலுள்ள சுவாமியின் பெயர் என்ன?" என்று சுந்தரர் கேட்டார். திருமுதுகுன்றம் என்ற பெயரைக் கொண்டு அந்தச் சிவாலயத்திலுள்ள சுவாமிக்கு விருத்தகிரீசுவர் என்று பெயர் சூட்டியிருந்தார்கள் பட்டர்கள். அந்தப் பெயரைச் சொன்னார்கள்.

நாயனாரின் முகம் சுருங்கிற்று போயும் போயும் கிழவரையா பாட வேண்டும் என்று மனத்தில் எண்ணிக் கொண்டு, "போகட்டும், அம்மன் பெயர் என்ன?" என்று வினவினார். "விருத்தகிரீசுவரி" என்றார்கள் கோவில் பட்டர்கள்.

"சுவாமிக்குத்தான் கிழவர் என்று பட்டம் சூட்டினீர்கள். அம்மனையும் கிழவியாக்கி விட்டீர்களே? கிழவனையும் கிழவியையும் என்னால் பாட முடியாது போங்கள்!" என்று சொல்லிவிட்டுச் சுந்தரமூர்த்தி நாயனார் கோபமாகக் கோவிலை விட்டுக் கிளம்பி விட்டார்.

சுந்தரமூர்த்தி நாயனாரால் பதிகம் பாடப் பெறாவிட்டால் தங்கள் ஊர் ஆலயத்துக்கு மகிமை ஏற்படாது என்று பட்டர்கள் கருதினார்கள். ஆகையால் ஆலயத்தில் இன்னொரு அம்மனைப் பிரதிஷ்டை செய்து "பாலாம்பிகை" என்று பெயர் சூட்டினார்கள்.

மறுபடியும் சுந்தரமூர்த்தி நாயனார் இருந்த இடத்துக்குப் போய் அவரிடம் மேற்படி விவரத்தைச் சொல்லித் திரும்பவும் திருமுதுகுன்றம் ஆலயத்துக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனார் பெரிய மனது செய்து மீண்டும் அந்த ஊருக்குச் சென்று பாலாம்பிகை சமேத விருத்தகிரீசுவரர் மீது பதிகம் பாடித் துதித்தார்.

இந்தக் கதையைக் கேட்டுவிட்டு ஆதித்த கரிகாலன் உடல் குலுங்கக் குலுங்கச் சிரித்தான். "பெரிய பழுவேட்டரையரிடம் வந்த கவிஞன் யாராவது ஒருவேளை சுந்தரமூர்த்தியைப் போல் சொல்லியிருப்பான். கிழவனையும் கிழவியையும் பாட மாட்டேன் என்று கூறியிருப்பான் அதற்காகத்தான் அவர் நந்தினியை மணந்து கொண்டாரோ, என்னமோ?" என்றான்.

இதைக்கேட்டுப் பார்த்திபேந்திரனும், கந்தமாறனும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அப்படி அவர்கள் சிரித்த சிரிப்பில் குதிரை மேலிருந்து கீழே விழுந்து விடுவார்கள் போலிருந்தது!


சிரித்து ஓய்ந்த பிறகு பார்த்திபேந்திரன், "கடவுள் முதுமை என்பதாக ஒன்றை, எதற்காக ஏற்படுத்தியிருக்கிறாரோ தெரியவில்லை. அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட வயது வரையில் ஒரே மாதிரி இருந்துவிட்டுச் சாவது என்று ஏற்படுத்தியிருக்கக் கூடாதோ?" என்றான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பகைவர்கள் செய்த உதவி



மலையடிவாரத்தில் இருந்த அந்த ஊரின் ஒதுக்குப்புறமாய் அழகான ஒரு குளம் இருந்தது. அந்த குளத்தில் எண்ணற்ற மீன்களும், தவளைகளும், மற்றும் பல வகையான பூச்சி இனங்களும் வாழ்ந்து வந்தன.

அந்த ஊர் மலை அடிவாரத்தில் இருந்ததால் குளமானது மலை அடிவாரத்தை ஒட்டியே இருந்தது. அதனால் மழை காலங்களில் மலையிலிருந்து பெரும் நீர் இந்த குளத்திற்குள் பாய்ந்து குளத்தை நிரப்பி விடும். அது மட்டுமல்ல, வெயில் காலங்களில் கூட அந்த மலையில் இருக்கும் ஊற்றிலிருந்து" கொஞ்சம் கொஞ்சமாய் தண்ணீர் அந்த குளத்திற்குள் வந்து விழுவதால், பெரும்பாலும், அந்த குளம் வற்றுவதில்லை. இதனால் அங்கு வசிக்கும் உயிரினங்கள் நிம்மதியாய் வாழ்ந்து வந்தன.

அந்த குளத்தை நம்பி அதை சுற்றிலும் விவசாய நிலங்கள் இருந்தன. அந்த குளத்தில் தண்ணீர் எப்பொழுதும் இருப்பதால் நிலத்தடி நீர் நன்கு ஊறி அந்த ஊரில் இருக்கும் கிணறுகளில் கூட தண்ணீர் வற்றாமல் இருக்கும். அதனைக் கொண்டு குளத்திற்கு சற்று தள்ளி இருக்கும் விவசாய நிலங்கள் கூட பாசன வசதிகளை பெற்று கொள்ளும்.

அந்த குளத்தின் கரை ஓரங்களில் எப்பொழுதும் கொக்குகளும், நாரைகளும் ஒற்றைக் காலில் தவம் இருந்து கரை ஓரம் ஒதுங்கி வரும் மீன்களை லபக்கென கவ்விக் கொண்டு பறந்து விடும். அதனால் எப்பொழுதும் குளத்தை சுற்றி பறவைகள் இருந்து கொண்டே இருக்கும். ஒரு நாள் அந்த குளத்தருகே நான்கைந்து பேர் நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

இந்த இடம் பூராவையும் வாங்கிட்டோமே. அப்ப இந்த குளம் இப்பொழுது நமக்கு சொந்தமா? என்று அதில் வெளுப்பாய் வேட்டி சட்டை அணிந்த ஒருவர் கேட்டார்.

ஐயா இந்த குளம் அரசாங்கத்துக்கு சொந்தமானதா இருக்குது, ஆனா அதை சுத்தி இருக்கற இடமெல்லாம் நாம் வாங்கி விட்டோம், பக்கத்தில் இருப்பவர் அவர் காரியதரிசியாக இருக்க வேண்டும். அவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

சரி அப்ப அதை விட்டுட்டு மற்ற இடத்தில நம்ம கட்டிட வேலை எல்லாம் ஆரம்பியுங்கள் என்று சொல்லிவிட்டு விறுவிறுவென கார் ஏறி பறந்து விட்டார். இந்த குளத்தை சுற்றியுள்ள பறவைகளும், மீன்களும் இதை எதை பற்றியும் அறியாமல் மிக சந்தோசமாய் இருந்தன.

ஓரிரு மாதங்கள் ஓடியிருக்கும், அந்த குளங்களை சுற்றிலும் ஆட்கள் கூட்டம் அதிகமாக ஆரம்பித்து விட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை எப்போதும் எளிமையிலிருந்தே கண்டறியப்பட வேண்டும், குழப்பத்திலிருந்து அல்ல.
– ஐசக் நியூட்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரை செம்மணிக்குக் கூட்டிச் செல்லுங்கள்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க் எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இலங்கைக்கு வரும் அவர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

இந் நிலையில் தமிழ்த் தரப்புகள் ஒன்று சேர்ந்து, வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்ற பாரிய மனித உரிமைகள் மீறல்களை ஆணையாளருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என நேற்றைய தினம் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

இது தொடர்பில் தமிழ்த் தரப்புகள் என்ன முடிவை எடுத்தன என்பது தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இங்கு வரும்போது; வன்னிப்போரில் இடம்பெற்ற தமிழின அழிப்புத் தொடர்பில் ஆதாரபூர்வமாகத் தெளிவுபடுத்துவது அவசியம்.

அதேநேரம் ஆணையாளர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும்போது அவரை செம்மணி புதைகுழி அமைந்த இடத்துக்கு அழைத்துச் சென்று அந்த இடங்களை அவருக்குக் காண்பிப்பதும் மிகவும் அவசியமானது.

ஆம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் செம்மணிப் பகுதிக்கு நேரில் சென்று, அங்குள்ள புதைகுழிகளைப் பார்வையிடுவதானது சர்வதேச அளவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே இது விடயத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் தொடர்பு கொண்டு செம்மணிப் புதைகுழி அமைந்த இடத்தை ஆணையாளர் நேரில் பார்வையிடுவதற்கான நேர ஒதுக்கீட்டைச் செய்தாக வேண்டும்.

ஆம், தமிழின அழிப்பு என்பது வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது மட்டும் இடம்பெற்றதல்ல. மாறாக, தமிழர் தாயகத்தில் படையினர் எங்கெல்லாம் ஆக்கிரமித்திருந்தனரோ அங்கெல்லாம் தமிழினப் படுகொலை நடந்துள்ளது.

அதிலும் 1995இல் இராணுவம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியது. இதன்போது இங்கிருந்து வெளியேறிய மக்கள் 1996ஆம் ஆண்டில் மீளவும் தமது இருப்பிடங்களுக்கு வந்தனர்.

படையினரை நம்பி யாழ்ப்பாணம் வந்த மக்கள் சந்தித்த அனர்த்தங்கள் கொஞ்சமல்ல. துப்பாக்கிச்சூடுகள், ஆட்கடத்தல்கள், கைதுகள், காணாமல் ஆக்கப்படுதல் என்ற கொடூரங்கள் ஊரடங்கு வேளையில் அரங்கேறின.

இங்குதான் மாணவி கிருசாந்தி குமாரசாமி, அவரது தாய், சகோதரன், அயலவர் என்போரை படையினர் செம்மணிச் சந்தியில் உள்ள இராணுவ முகாமில் வைத்து சித்திரவதை செய்து கொன்று செம்மணியில் புதைத்தனர்.

இந்தப் புதைகுழி விவகாரம் வெளிவந்த போதுதான், செம்மணியில் மனிதப் புதைகுழிகள் உள்ளன என்ற தகவல் வெளியாயிற்று. இதையடுத்து செம்மணியில் இரவிரவாக படையினரின் வாகனங்கள் ஓடித்திரிவதும் கிடங்குகள் வெட்டப்படுவதுமான சம்பவங்கள் நடந்ததான தகவல்களும் உண்டு.

**எனவேதான் செம்மணிப் புதைகுழி அமைந்த இடத்துக்கு ஆணையாளரை கூட்டிச் செல்வது அவசியமாகிறது.**

# ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்ட நபர்களின் பட்டியலைப் பகிரங்கப்படுத்துக

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

வெசாக்பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்ட நபர்களின் பட்டியலைப் பகிரங்கப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டு இதனைத் தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டதாவது,

வெளிப்படைத்தன்மையை உறுதியளித்த ஜனாதிபதி, முழு பட்டியலையும் பாராளுமன்றத்தில் வெளியிட்டு செயல்முறையைத் தணிக்கை செய்ய வேண்டும்.

"388 வெசாக் மன்னிப்புகள் நீக்கப்பட்டன. ஆனால் பட்டியலில் இல்லாத ஒரு மோசடி செய்பவர் வெளிநடப்புச் செய்தார். வெளிப்படைத் தன்மையை உறுதியளித்த ஜனாதிபதி, உத்தரவில் கையெழுத்திட்டார். எனவே வெளிப்படைத் தன்மை மற்றும் அமைப்பு மாற்றத்தின் நலனுக்காக ஜனாதிபதி முழுப் பட்டியலையும் பாராளுமன்றத்தில் வெளியிட்டு செயல்முறையை தணிக்கை செய்ய வேண்டும் என்றுள்ளது.

2025 வெசாக் தின ஜனாதிபதி பொதுமன்னிப்புப் பட்டியலில் பெயரிடப்படாத வங்கியாளர் டபிள்யூ.எம். அதுல திலகரத்ன, அநுராதபுரம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டமை அங்கீகரிக்கப்படாதது என்று கண்டறியப்பட்டதையடுத்து சிறைச்சாலை ஆணையாளர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் இவ்வாறு பலர் வெவ்வேறு சிறைச்சாலைகளிலிருந்து சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதி பல கோணங்களில் குற்றப் புலனாய்வுத் துறை விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பின் முழுப் பட்டியலை வெளியிடுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

# பொலிஸாரைத் தாக்கிய ஐவர் கைதாகி மறியலில்

பேருவளை - மீன்பிடித் துறைமுகப் பகுதியில் பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று (10) மாலை களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் முன்னிலைப் படுத்தப்பட்ட பின்னர் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தின் மேலதிக நீதவான் 5 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் (09) இரவு பேருவளை மீன்பிடித் துறைமுகத்துக்கு அருகில் பொலிஸாருக்கும் பௌத்த கொடிகளை ஏற்றி வைத்திருந்த ஒரு குழுவினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

இதன்போது ஏற்பட்ட உரையாடல் தீவிரமடைந்ததையடுத்து அந்தக் குழு பொலிஸாரைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

பின்னர் சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குழுவொன்று லொறியில் ஏறி பௌத்த கொடிகளை ஏற்றியவாறு இருந்தபோது பொலிஸார் வீதியை மறைக்க வேண்டாம் என அவர்களுக்கு அறிவுறுத்திய பின்னர் இந்தச் சம்பவம் ஏற்பட்டது. (ம-4,7)

# முறுக்குக் கம்பியில் தரமற்ற உற்பத்தி

## களஞ்சியசாலை முற்றுகை

(கொழும்பு)

தரமற்ற முறுக்குக் கம்பிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை முற்றுகையிடுவதற்கு நுகர்வோர் விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கஹதுடுவப் பகுதியிலுள்ள ஒரு நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் இந்த முறுக்குக் கம்பிகள் இரவு நேரத்தில் நீர்கொழும்புப் பகுதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றுக்குக் கொண்டு செல்லப்படுவதாக அதிகாரிகள் இதன்போது கண்டறிந்துள்ளனர்.

அதன்படி விசாரணை அதிகாரிகள், குறித்த உற்பத்தி நிறுவனத்திலிருந்து இரவு நேரத்தில் பொருட்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றை பின்தொடர்ந்து கடந்த 06 ஆம் திகதி அந்தக் களஞ்சியசாலையை முற்றுகையிட நடவடிக்கை எடுத்தனர்.

அப்போது அந்த இடத்தில் சுமார் 400 தொன் என மதிப்பிடப்பட்ட முறுக்குக் கம்பிகள் களஞ்சியசாலையில் இருப்பது கண்டறியப்பட்டதுடன் இந்தப் பொருட்களின் சந்தை மதிப்பு 100 மில்லியன் ரூபாய்க்கும் அதிகம் என இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன்படி இந்த முற்றுகை தொடர்பாக நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் B அறிக்கை மூலம் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அடுத்தகட்ட விசாரணைகளுக்குப் பின்னர் வழக்குத் தொடரப்படவுள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-4,7)

# கசிப்பு உற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் முற்றுகை

## பெண் ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றைப் பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

அத்துடன் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவரையும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை (10) பிற்பகல் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றினையடுத்து தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.எம்.பி பண்டாரவின் ஆலோசனையில் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவுக் குழுவினர் சம்பவதினமான நேற்று கருவப்பங்கேணியில் கசிப்பு உற்பத்தி நிலையமான வீடு ஒன்றை சுற்றிவளைத்து முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 44 வயதுடைய பெண் ஒருவரைக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 100 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களை மீட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவருக்கு எதிராக பொசன் பூரணை தினத்தில் கசிப்பு உற்பத்தி மற்றும் சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தி ஆகிய குற்றங்களுக்குக் கீழ் வழக்குத் தாக்கல் செய்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த பண்டார பணிப்புரையின் கீழ் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகை மருத்துவத்து தூய்மைத்தன்மைக்கு தரநிர்ணய அளவீடு அவசியம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

பாரம்பரிய மருத்துவத்தின் புனிதத்தன்மை அதில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சுத்தமான சரியான மூலிகைகளாகும். எமது பிரதேசத்தில் பாரம்பரிய மருத்துவத்தில் பல புகழ்வாய்ந்த பரியாரிமார் இருந்ததையும் தற்போதும் ஆங்காங்கே அவர்கள் தமது கைவைத்தியத்தை செய்வதிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருக்கின்றனர். குறிப்பிட்ட நோயிற்கு சிறந்த வைத்தியம் பார்க்கும் இப்பாரம்பரிய வைத்தியர்களினூடே அவர்களின் பரம்பரையூடாக அதன் இரகசியமும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

இப்பாரம்பரிய மருத்துவத்தில் எமது ஊரில் காணப்படும் மூலிகைகள் பலவும் அவற்றின் தனித்துவ தன்மையின்பால் பயன்படுத்தப்பட்டும் வந்திருக்கிறது. சரியான அருமை பெருமையான மூலிகைகள் சரியான வகைகளில் கைகண்ட அளவுகளில் பதப்படுத்தப்பட்டு பாரம்பரிய மருத்துவத்தில் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.


வசதிவாய்ப்புக்கள் பெருகப் பெருக மேலைத்தேய மருத்துவத்தில் புதுமைகள் உட்புகுந்திருந்தாலும் இன்றும் எம்மவர்கள் தாவர மூலிகைகளின் வெவ்வேறு பாகங்களை பதப்படுத்தி இன்னும் காயவைத்து அவற்றை அரைத்து பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு மூலிகைகளின் தாவர பாகங்களைச் சேகரிக்கும் போதும், பதப்படுத்தும் போதும் இன்னும் களஞ்சியப்படுத்தும் போதும் பல்வேறுவகையான கண்ணுக்குத் தெரியாத பூஞ்சணங்கள், பூச்சிகள் மற்றும் சிற்றுண்ணிகளின் சேதத்திற்கும் உள்ளாவது தவிர்க்க முடியாததாகின்றது. இவற்றைப் பற்றிய தெளிவு மற்றும் அறிவு இல்லாதிருந்தால் இவ்வாறான சேதத்திற்குள்ளான தாவர பாகங்களை மருந்து தயாரிப்பில் பயன்படுத்தும் போது அவற்றினால் எதிர்பார்த்த விளைவு கிடைக்காமலும் உடலுக்கு தீங்கானதாகவும் மாறிவிடுகின்றன. தூய்மையான நிலையில் பேணப்படும் பாரம்பரிய மருத்துவத்தில் இவ்வாறான தவறான மூலிகைப் பாகங்களை பயன்படுத்தலை தவிர்க்க வேண்டிய கடப்பாடு மருத்துவத் தன்மைக்கு உண்டு.

இதனை மையப்படுத்தியே இற்றைக்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண கச்சேரியினால் அன்றைய வட கிழக்கு மாகாண செயலாளராக இருந்த மறைந்த உயர்திரு. ரங்கராஜ் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட ஒரு கருத்தமர்வில் பாரம்பரிய மருத்துவம் மற்றும் சித்த மருத்துவம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் மருந்துகள் தயாரிப்பில் அவசியம் தரநிர்ணய கட்டுப்பாடுகள் முறையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் அதற்காக வடமாகாணத்தில் இதற்கான மூலிகை மருத்துவ தரநிர்ணய கட்டுப்பாட்டு சபை அல்லது அலகு நிறுவப்பட வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான செயற்றிட்டமும் வடிவமைக்கப்பட்டது. ஆனாலும் இற்றைவரை அந்த தரநிர்ணய கட்டுப்பாட்டு அலகு நிறுவப்படவில்லை நிறுவுவதற்கான முன்னேற்பாடுகளும் எடுக்கப்படவில்லை.

மறைந்த பேராசான் பாலசுப்பிரமணியம் அவர்களினால் உருவாக்கப்பட்ட பயோரெக்தனியார்நிறுவனத்தில் நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்துவதற்கான தரமான சிறுகுறிஞ்சாபவுடர் உற்பத்தி செய் யப்பட்டு எமது பிரதேசத்திற்கு மட்டுமல்ல பிறநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



குறிப்பாக கனடா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா மற்றும் எமது புலம்பெயர் உறவுகள் வதியும் நாடுகளுக்கு சிறுகுறிஞ்சாபவுடர் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதற்காக ஏக்கர் கணக்கில் சிறு குறிஞ்சா செடிகள் பயிரிடப்பட்டு இலைகள் சேகரிக்கப்பட்டு காயவைக் கப்பட்டு பின்னர் பவுடராக அரைக்கப்பட்டு பொதிசெய்யப்பட்டன.

இவ்வாறான நிலையில் பேராசானின் அழைப்பில் அவர்களது சிறு குறிஞ்சா செடிகளை பார்வையிட்ட போது கொடியின் இலைகளில் குருத்தில் அழுக்கணவன், மாவுப்பூச்சி மற்றும் சிற்றுண்ணிகளின் தாக்கம் காணப்பட்டது. தாக்கம் காணப்பட்ட இலைகளில் வெளிறல் தன்மை அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் சிற்றுண்ணிகளின் கூடும் ஒட்டியிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. இந்த வன்கூடு எமது சமிபாட்டுத் தொகுதியில் இலகுவில் சமிபாடடையக்கூடிய பொருளல்ல. அதனால் சிறுகுறிஞ்சா இலைகளை அப்படியே ஒடித்து கழுவாது உண்ணக்கூடாது. அந்த இலைகளில் இருக்கும் பூச்சிகள் சிற்றுண்ணிகள் அவற்றைவிட அதிலுள்ள சேதங்கள் என அனைத்தையும் கவனித்து அதனை பயன்படுத்த வேண்டும். சிறுகுறிஞ்சா இலைகளை அரைத்து பவுடராக்கும் போது இவ்வாறான ஜந்துக்களும் இன்னும் காயவைத்து பயன்படுத்தும் போது சற்று நீர்த்தன்மை இருந்தால் பூஞ்சணத் தொற்றும் இருக்க சாத்தியக் கூறுகளுண்டு. எனவே அனைத்தையும் கவனித்து பவுடராக்கி பயன்படுத்தல் வேண்டும்.

பாரம்பரிய மருத்துவத்தின் தூய்மைத் தன்மையே மேன்மேலும் உறுதிசெய்வதற்கு தரநிர்ணய கட்டுப்பாடுகள் அவசியம் பின்பற்றப்படல் வேண்டும். இந்த அறிவு சித்த மருத்துவ கற்கையில் இன்னும் உட்புகவில்லை. ஆதலினால் பீடமாகிய சித்த மருத்துவம் மூலிகைகளின் தரநிர்ணய கட்டுப்பாடு விடயங்களை கற்பிப்பதோடு அதற்கான அலகினை வடமாகாணத்தில் நிறுவுவதற்கான முயற்சியையும் வடமாகாண சுதேச வைத்தியத்துறையுடன் இணைந்து எடுத்தல் அவசியமாகும். மூலிகைகளின் தரத்தை மேன்மைப்படுத்தும் ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் அதற்கான ஆளணி மற்றும் ஆய்வு கூட வசதியுடன் உருவாக்கப்படல் வேண்டும்.

கலப்படமில்லாத சுத்தமான மூலிகைகளை உற்பத்தி செய்வதற்கும் அவற்றின் மருத்துவத்தன்மை குறையாதவாறு அவற்றை சேகரித்து சுத்தமாக்கி மருந்து தயாரிப்பதற்கான ஆக்கபூர்வ வழிமுறைகளையும் ஆயுர்வேத மருந்துகளின் பாவனையில் முழுக்க தங்கியிராது சித்த மருந்துகளின் உற்பத்தியை அதிகரிக்கவும் அதற்கான தூய்மையான தரமான மூலப்பொருட்களை பெறவும் அவற்றை சுத்தமாக்கி பயன்படுத்துவதனை உறுதி செய்யயும் பரிந்துரைக்கப்படுகின்றது.

தரத்தினை கூட்டுவதன் மூலம் எமது பிரதேசத்தை சூழல்சார் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கு ஏற்புடைய இடமாக மாற்றவும் வாய்ப்புக்கள் அதிகம். நீர்வேலியில் தயாரிக்கப்படும் சித்த மருந்துகளைப் போல தரமான மருந்துகள் எம்மூர் மூலிகைகளை கொண்டு உற்பத்தி செய்யவும் அவற்றை உலகத் தரமான சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் பிறநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதன் மூலம் எம் மூர் பாரம்பரிய மருத்துவத்தை உலகளவிற்கு எடுத்துச் செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம். சுற்றுலாத்துறை விருத்தியடையும் போது அதனால் எமது மக்களுக்கான வருவாய் வேலை வாய்ப்புக்கள் வசதிகள் பெருகும். குறிப்பாக எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அரிய சந்தர்ப்பத்தை அனைவரும் எதிர்பார்த்திருக்கின்றோம்.

மூலிகை மருத்துவ தரநிர்ணய கட்டுப்பாட்டு அலகு அல்லது சபை உருவாக்கலில் மாகாண அனுபவமிக்க நெறியாளர்கள், பாரம்பரிய் மருத்துவர்கள், சித்த வைத்தியர்கள், மூலிகை மருத்துவ உற்பத்தியாளர்கள் இன்னும் ஆய்வுக்குரியவர்கள், தாவர வல்லுனர்கள், குளிகை உற்பத்தி அலுவலர்கள், பீடை முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் இணைந்த குழு மூலம் இதனை நெறிப்படுத்தலாம். மேலும் மூலிகை தாவர பாகங்களை சேகரித்தலும் அவற்றை முறையாக பதப்படுத்தி பின்னர் அதனை பவுடராக்கி பிரித்தெடுத்து விடுவர்.

தூய்மான மருத்துவ உற்பத்திகளுக்கு வலுச்சேர்க்கும் மேற்குறிப்பிடப்பட்ட விடயம் எமது பாரம்பரிய மருத்துவத்தின் மகிமையை தொடர்ந்தும் காப்பாற்றுவதுடன் மறைந்த பெருமகனார் ரங்கராஜ் அவர்களின் கனவினையும் நனவாக்கும் வழியாகும். சுற்றுலாத் துறையுடனிணைந்த சேவை வழங்கல் துறையாக சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான வழிமுறைகளையும் சிறிது சிறிதாக உருவாக்குதல் அவசியமானதாகும். எம்மூர் மருத்துவத்தின் சிறப்பை அனைவரும் பெற்று வாழ்வாங்கு வாழ தரநிர்ணய கட்டுப்பாட்டு சபையின் உருவாக்கல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி...

கஞ்சாவுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

வழிபட வந்த நபர் அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதை அடுத்து பொலிஸார் அவரை விசாரணைக்குட்படுத்திய நிலையில் அவரிடமிருந்து கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த பலாலிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,4)

## வற்றாப்பளை...

உயிரிழந்த இளைஞன் நித்திரைத் தூக்கம் காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (ம-7,4,316)

## பொறுப்புக்...

கையை விடுத்துள்ளார்.

30 வருட யுத்தத்தின்போது கொலைகள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை உள்ளிட்ட பரவலான துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் அரச படைகள் பொது மக்களைத் தாக்கியதுடன், சிலரை வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கியுள்ளன.

போருக்குப் பின்னர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பொறுப்புக்கூறலின் அவசியத்தை எடுத்துக்காட்டும் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதுடன், சாட்சிய சேகரிப்பு செயல்முறையையும் நிறுவியுள்ளது.

எனினும், அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கமும் இதுவரையான செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் அதன் முன்னைய அரசாங்கங்களிடமிருந்து வேறுபட்டதாகத் தெரியவில்லை.

இதன்படி போர்க்குற்றங்களில் தொடர்புடைய முன்னாள் சிரேஷ்ட அதிகாரிகளைப் பாதுகாத்து, பேரவையின் கோரிக்கைகளை நிராகரித்துள்ளது.

எனவே பொறுப்புக்கூறலை நிராகரித்து கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்திடம் அதனை நிறைவேற்றுமாறு வலியுறுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை முன்வைத்துள்ளது. (ம-7,4)

## சட்டவிரோதமான...

வாய்க்கிழமை (10) நடைபெற்ற தேசிய பொசன் உற்சவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அங்கு மேலும் உரையாற்றியதாவது,

சமூகம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. குற்றங்களைத் தடுக்க வேண்டிய பொலிஸ் சேவையில் ஒருசிலர் குற்றவாளிகளை பாதுகாக்கின்றனர். இதுவே உண்மை.

சட்டவிரோதமான வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகத்தைத் தடுப்பது குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும். ஆனால் அந்தக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் பாதாளக் குழுக்களின் தலைவர்களுக்கு சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு கடவுச்சீட்டு வழங்கியுள்ளது.

நிறுவனத்தின் பொறுப்பு மீறப்பட்டுள்ளது. சிறைக்கைதிகளுக்கு தேவையான வசதிகள் மற்றும் பாதுகாப்பை வழங்குவது சிறைச்சாலை தலைமையகத்தின் பிரதான பொறுப்பாகும்.

ஆனால் அந்தத் திணைக்களம் சட்டவிரோதமான முறையில் கைதிகளை விடுவித்துள்ளது. மோட்டார் வாகனத்தின் செயற்பாடுகள் குறிப்பிடுவதற்கு ஒன்றுமில்லை. மக்களுக்குச் சேவையாற்றும் அனைத்து நிறுவனங்களிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

வீழ்ச்சியடைந்துள்ள நிறுவனக் கட்டமைப்பை முதலில் மறுசீரமைக்க வேண்டும். சமூகக் கட்டமைப்பு முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. சமூகக் கட்டமைப்பிலான நிறுவனங்களை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்றார். (ம-7,4)

## ஜனாதிபதியின்...

கும் அமைப்பினர் நீதியமைச்சின் முன்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை (9) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நேரில் சென்று சந்தித்த நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவை நீதியமைச்சின் காரியாலயத்துக்குள் அழைத்து, அவர்களுடன் சுமூகமான முறையில் கலந்துரையாடினார்.

இதன்போது சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் பிரதிநிதிகள் சிறைச்சாலையில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் தீவிரமடைந்துள்ளது என்று குறிப்பிட்டதுடன், ஒருசில அதிகாரிகள் கைதிகளிடம் இலஞ்சம் பெற்று ஜனாதிபதி பொதுமன்னிப்பை முறைகேடான வகையில் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் கைதிகளை விடுவிப்பதாகவும் தெரிவித்தனர்.

இவ்வாறான மோசடிகளால் ஜனாதிபதி பொதுமன்னிப்பு கிடைக்க வேண்டிய கைதிகள் பாதிக்கப்படுவதாகவும், அது அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்றும் குறிப்பிட்டனர்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நீதியமைச்சர் இந்தக் கைது விடுவிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் கடந்த 6 ஆம் திகதி பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின.

இந்தச் செய்தி தொடர்பில் ஆராய்ந்து அன்றைய தினம் 6.30 மணியளவில் 15 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைத்தேன். இந்த விடயத்தில் ஜனாதிபதியின் அதிகாரம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிக்கையில் சுட்டிக்காட்டினேன்.

ஜனாதிபதியின் உயர் அதிகாரத்தை முறைகேடான வகையில் பயன்படுத்தி இந்தக் கைதி விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7,4)

## கடும்...

யாழ்.தையிட்டிப் பகுதியில் உள்ள திஸ்ஸ விகாரையானது சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து அப்பகுதியில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், பொசன் போயா தினமான நேற்றும் (10) அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த இடத்திற்கு சிங்கள ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

நேற்றைய போராட்டம் இடம்பெறும் பகுதிக்கு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கலகம் அடக்கும் பொலிஸார் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும் போராட்டம் அமைதியான முறையில் இடம்பெற்றிருந்தது.

இதேவேளை, நேற்றைய தினம் தையிட்டி விகாரைக்கு வழிபாட்டுக்காக அதிகமான மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் வழமைபோன்றே பக்தர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4,33)


மஹஜன சம்பத
திகதி 2025.06.10
சீட்டிழுப்பு இலக்கம் 5856
P 8 7 9 6 3 9
அத சம்பத P 9 6 3 9
சீட்டிழுப்பு இலக்கம் 0431
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1886
M 25 36 50 76 M
Double Chance 77721

மெகா பவர்
திகதி 10/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2204
V 10 18 43 64 68

ஜய JAYA
திகதி 2025.06.10
சீட்டிழுப்பு இலக்கம் 0124
J 2 7 0 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4098
சீட்டிழுப்பு திகதி 10.06.2025
T 05 07 20 58
T
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.10
சீட்டிழுப்பு இலக்கம் 1165
மேஷம் 15 18 34 38 மேஷம்
60172 12

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
10.06.2025 வெற்றி வாரம் 564
J 8 7 8 3 1 5
58739
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,907,277.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2830
சீட்டிழுப்பு திகதி 2025.06.10 தினம் செவ்வாய்க்கிழமை
14 15 30 31 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,383,372.00
DLB

சனிதா
திகதி 10.06.2025 வெற்றி வாரம் 4991
44 45 65 67 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,795,304.80
செகண்ட் சான்ஸ் ரூ. 50,000/- 66205
DLB

சசிரி
வெற்றி வாரம் 701
சீட்டிழுப்பு திகதி 10.06.2025
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 12 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4542
சீட்டிழுப்பு திகதி 10.06.2025 தினம் செவ்வாய்க்கிழமை
17 26 47 54 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,585,299.60
263106
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 34 06 12 47 71
2006
10.06.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.577,671,199.60
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2656
சீட்டிழுப்பு திகதி : 2025.06.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,641,918.40
39 47 57 65 C
885334
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 68 சிறை...

தெரியவந்துள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் (ஏஎஸ்ஜி) திலீப பீரிஸ் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஏ.எஸ்.ஜி. பீரிஸின் கூற்றுப்படி, 2024 கிறிஸ்துமஸின் போது 57 கைதிகளும், 2025 சுதந்திர தினத்தின் போது மேலும் 11 கைதிகளும் தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத போதிலும் சட்ட விரோதமாக விடுவிக்கப்பட்டனர்.

பணிநீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலை ஆணையர் நாயகம் துஷார நிஷாந்த உபுல்தெனிய, கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போது, ஏ.எஸ்.ஜி. பீரிஸ் இந்த சமர்ப்பணங்களை வழங்கினார். சில கைதிகள் ஜனாதிபதி மன்னிப்பு பெற்றதைக் குறிக்கும் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்ததாக உபுல்தெனிய மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வெசாக் போயா பண்டிகையின் போது, நாடு முழுவதும் உள்ள 29 சிறைச்சாலைகளில் இருந்து 338 கைதிகள் விடுவிக்கப்பட்டதாகவும், அவர்களில் குறைந்தது இரண்டு பேர் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சிறைச்சாலை மற்றும் சட்ட அமுலாக்க அமைப்புகளுக்குள் உள்ள ஆழமான தோல்வியை இந்த கண்டுபிடிப்புகள் பிரதிபலிக்கின்றன என்று ஏ.எஸ். ஜி. பீரிஸ் நீதிமன்றத்தில் மேலும் கூறினார். சட்டவிரோத நடைமுறைகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் வேரூன்றத் தொடங்கியுள்ளன என்று அவர் எச்சரித்தார். சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் முரட்டு வலையமைப்புகள் என்று அவர் விவரித்தவற்றை அகற்றுவதில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் விசாரணை அதிகாரிகளை ஆதரிக்குமாறு நீதித்துறையை அவர் வலியுறுத்தினார். (ம-4,7)

## ஜேர்மனிக்கு...

ஜேர்மனிக்குப் பயணமாகியுள்ளார்.

மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று இரவு ஜனாதிபதி நாட்டிலிருந்து புறப்பட்டு சென்றுள்ளார்.

ஜேர்மனியின் ஜனாதிபதி பிராங்க்-வோல்டரின் அழைப்பின் பேரில் இந்த விஜயம் அமைந்துள்ளது.

இன்று (11) முதல் ஜூன் 13 வரை இடம்பெறும் இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி, ஜேர்மனியின் ஜனாதிபதி, பெடரல் அரசின் முதலமைச்சர்கள் மற்றும் பிற உயர்மட்ட பிரதிநிதிகளைச் சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் ஆகியோர் இந்த விஜயத்தில் பங்கேற்றுள்ளனர்.

நேற்றிரவு சுமார் 08.33 மணிக்கு கட்டார் ஏர்வேஸ் விமானம் QR-655 மூலம் ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினர் டோஹாவுக்குப் புறப்பட்டு சென்று அங்கிருந்து மற்றொரு விமானத்தில் ஜேர்மனிக்குச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. (ம-4,7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3174)

076 825 7716 (ஆகாஸ்)



## மணப்பெண் தேவை

1. கொல்லன்கலட்டி - புன்னாலைக்கட்டுவன், இந்து, 1991, அனுஷம், Msc. In Economics, Denmark Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52531)
2. புங்குடுதீவு, இந்து, 1989, அத்தம், IT Engineer, Germany Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (44263)
3. மீசாலை, இந்து, 1985, உத்தராடம், Chief Chef, France Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (42607)
4. புலோலி, இந்து, 1993, புனர்பூசம், Bachelor Of Computer Science, Engineer, Sweden Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (36387)
5. கரவெட்டி, இந்து, 1990, மகம், Msc, Finland Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (34728)
6. பருத்தித்துறை, இந்து, 1993, ரேவதி, Bachlor Of Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32449)
7. இணுவில், இந்து, 1986, ரோகிணி, Bachelor Of IT, Norway Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (31506)
8. நெடுந்தீவு, இந்து, 1989, அஸ்வினி, BSc Civil Engineer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(33075)
9. காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், ACCA Qualified, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (28386)
10. மானிப்பாய் - அச்சுவேலி, இந்து, 1987, பரணி, CIMA + Charted Accountant, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (28131)

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
(C-3176)



## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண், பெண், பில் கிளார்க் தேவை. கணனி அறிவு விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :
077 730 4013
077 244 9834
(C-3146)



## கடா ஆடு விற்பனைக்கு

தாவடியில் சணல் இன கடா ஆடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 605 9613
(4505)



## Jaffna Horticulture (Pvt) Ltd

### வேளாண் பண்ணைக்கு ஆண் தொழிலாளர்கள் தேவை

இரவும் தங்கிக் கொண்டு பணியாற்றக் கூடியவர் ஆக இருக்க வேண்டும். அனுபவம் உள்ளவர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் விரைவில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
077 224 0621
076 708 9495
(1217)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3175)



## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Main Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



யாழ்/வைத்தீஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

இடம் : கல்லூரி விவேகானந்த மண்டபம்
காலம் : 22.06.2025 (ஞாயிற்றுக்கிழமை)காலை 9.30 மணி
தலைவர் : திருமதி. வாசுகி தவபாலன்

யாழ்/வைத்தீஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 22.06.2025 (ஞாயிறு) காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இக் கூட்டத்தில் சமர்ப்பிக்க பிரேரணைகள் இருப்பின் செயலாளருக்கு கூட்டத்திலிருந்து ஒரு கிழமைக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்
- ஆசிரியர் – பழைய மாணவர் துடுப்பாட்டம்
- ஆசிரியைகள் – பழைய மாணவிகள் கிளித்தட்டு
- மதியபோசனம்
- பொதுக்கூட்டம்
- புதிய நிர்வாக சபைத் தெரிவு

கௌரவ செயலாளர்,
திரு.R.கிருஸ்ணகுமார்
(4518)



## காணி விற்பனைக்கு

நிலாவரை சந்திக்கு அருகில் முதலீட்டுக்கு சிறந்த 2 பரப்பாக பிரிக்கப்பட்ட 30 காணித் துண்டுகள்

- வங்கிக்கடன் பெறக்கூடிய தெளிவான ஆவணங்கள்
- போக்குவரத்துக்கு இலகுவான தார் வீதி
- நல்ல தண்ணீர் வளம்
- அமைதியான குடியிருப்புள்ள சூழல்
- பரப்பு 17 லட்சம் ரூபா, உடன் கொள்வனவு செய்பவருக்கு 10% கழிவு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 082 1010, 075 676 4346
(4513)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org